581/94

செந்தமிழ்ச் செல்வி

67 4

நவம்பர், 1992

2L
031ை211,N27
N92-67.4
191738

S81
94

# செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு-௬௭ பால்-௪ திசம்பர் 1992
திருவள்ளுவர் ஆண்டு-௨௦௨௩ கார்த்திகை



"செந்தமிழ்ச் செல்வி"
(செந்தமிழ்த் திங்கள் இதழ்)
திறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை

இதழாசிரியர் குழு
முனைவர் பொன். கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் பொன். சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
முனைவர் சொ. சிங்காரவேலன்
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.,

## உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| புதிய துணைவேந்தர் | கஉக |
| மரபியல் ஆராய்ச்சி | கஉரு |
| "சந்ததமும் அடியார்கள் சிந்தையது குடியானவன்" (திருப்புகழ்) | கஙக |
| பெண்பாற் புலவர்கள் | கஙங |
| இலர் பலர் யார்? | கஙஎ |
| தமிழிசை மரபு | கசங |
| திருக்கோவையே முதற்கோவை | கசரு |
| சங்க நூல்களில் சங்குகள் | கருக |
| தமிழ் ஏன் பிறமொழிகளாய் மாறியது? | கருங |
| செய்திகள் | கருஎ |
| மதிப்புரை | கருஅ |

**முருகவேள் பன்னிரு திருமுறை**
—டாக்டர் தணிகைமணி
வ. சு. செங்கல்வராய பிள்ளை 940 00

முருகனின் பத்தித் திறத்தாலே இவ்வையம் முழுதும் உய்யும் எனப் பரவிய அடியார்களும், அவனடியைப் பரவிய வ.சு.செ. அவர்களும் யாரும் மறக்க முடியாத-வர்கள். ஞானத்தின் திருவிளக்காய் அமைந்த அந் நூல்களின் உள்ளக்கிடக்கையைப் பாமரரும் எளிதில் அறியும் வண்ணம் உரைவகுத்த வ. சு. செங்கல்வ ராயரின் தெய்வீகப்பணி நினைந்து, நினைந்து இன்புறத் தக்கதாம்; படித்துப், படித்துப் பரவசம் கொள்ளத் தகுந்ததாம் என்பதை இந் நூலுரை உணர்த்தாமல் உணர்த்துகின்றது.

# செந்தமிழ்ச் செல்வி

தி. வ. ஆண்டு உ0உ௩ - கார்த்திகை
டிசம்பர் - 1992
சிலம்பு-௬எ, பரல்-௪

## புதிய துணைவேந்தர்

தமிழ் வளர்ச்சிக்கெனவே அமைக்கப்பெற்ற தனிப் பல்கலைக்கழகம் தஞ்சையி லுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம். தமிழ் வளர்ச்சியில் நாட்டம் கொண்டு அதனை நிறுவியவர் மறைந்த தமிழக முதல்வர். டாக்டர். எம். ஜி. இராமச் சந்திரன் அவர்கள். அதன் நான்காவது துணைவேந்தராகப் பொறுப்பேற்பவர் நாவுக்கரசர், உரைவேந்தர், பட்டிமன்றப் பாங்கறி தலைவர், நற்றமிழ்ச்செல்வர் டாக்டர். ஔவை நடராசன் அவர்கள். உரைவேந்தர் எனத் தமிழுலகம் போற்றி மகிழ்ந்து பாராட்டும் பேராசிரியர் ஔவை. துரைசாமிப்பிள்ளை அவர்களின் திருமகனார் இவர். பழந் தமிழ் இலக்கியங்களுக்கு உரை எழுதுவதில் வேந்தராகத் திகழ்ந்த தந்தையாருக்குப் பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று உரை நிகழ்த்துவதில் வேந்தராகத் தனயன் அமைந்ததில் வியப்பேதுமில்லை. தந்தை எழுத்துக்களில் தலைசிறந்து நிற்கிறார், மகன் எழுந்து நின்று பேசுவதில் தலைசிறந்து நிற்கிறார். முன்னவரின் பேனாவைக் கண்டு வியந்து நின்றது தமிழ்கூறு நல்லுலகம். பின்னவரின் பேச்சாற்றலைக் கண்டு வியந்து நிற்கிறது தமிழ்கூறு நல் லுலகம்.

பேசுவது ஔவையவர்களுக்குக் கலையென்றால் அதை விடப் பாங்கறிந்து பெரியோர்களிடம் பண்பாகப் பழகுவது கைவந்த கலை. முதியோரையும் தமிழ்ப் பெரியோர் களையும் கண்டுவிட்டால் 'அப்பா' என அழைத்து அகங் குழைந்து நிற்கும் காட்சி காண்போர்க்கு இனிய காட்சி. தமிழகத்தின் தலைசிறந்த தமிழறிஞர்கள் அனைவரையும் இவர் நன்கறிவார். வாழ்வில் பொது நிலையான சமரச நிலையைக் கடைப்பிடித்தாலும் தந்தையாரைப்போல் சைவத் திருமுறைகளிலும் சித்தாந்த சாத்திரங்களிலும்

ஊறித் திளைப்பவர். ஆங்கிலப் புலமை இவருக்குக் கூடுதல் சிறப்பு. ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை உருவாக்குவதில் வல்லவர். தமிழ் மரபறியாது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ள நூல்களில் உள்ள குறைகளை மிகத் திறப்படச் சுட்டிக் காட்டுவதில் வல்லவர். மேடையில் பேசுவது என்பது இவருடைய மாலைநேரப் பொழுதுபோக்கு. வேறு எந்த மேடையில்லையாயினும் தனக்கென அவர் சொந்த மேடையாக வைத்துக்கொண்டுள்ள சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தில் அவரைக் காணலாம். செவ்வாயென்றால் பட்டிமன்றம். வெள்ளியென்றால் வள்ளுவர் கோட்டம் என்று கிழமையில் நாளுக்கொரு கூட்டம்.

உரைவேந்தரான இவரைத் துணைவேந்தராக்கிய தமிழக அரசைப் பாராட்டுகிறோம். அதற்குரிய எல்லாத் தகுதிகளையும் பெற்றவர் இவர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நான்காவது துணைவேந்தராகப் பொறுப்பேற்கும் டாக்டர். அவ்வை நடராசன் அவர்களைப் பாராட்டுகிறோம். அதன் முதல் மூன்று துணைவேந்தர்களான டாக்டர் வி. அய். சுப்பிரமணியம், டாக்டர். ச. அகத்தியலிங்கம், டாக்டர். சி. பாலசுப்பிரமணியம் ஆகிய சிறந்த தமிழறிஞர்களின் வழியில் புதிய துணைவேந்தர் பொறுப்பேற்கிறார். பல்கலைக்கழகம் தொடங்கிப் பத்தாண்டுகள் ஆன நிலையில் இன்னும் தளர் நடையிடும் பருவத்திலேயே இருக்கிறது. அது தளர் நடையா அல்லது வளர்ச்சி காணாத் தளர்ச்சி நடையா என்பது சரிவரத் தெரியாத நிலையில் புதிய துணைவேந்தர் பொறுப்பேற்கிறார்; துணைவேந்தராக இல்லையெனினும் தொடக்க முதல் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவில் இடம் பெற்றிருந்ததால் டாக்டர் அவ்வை அவர்களுக்குப் பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையும் நன்கு தெரியும். எனவே பல்கலைக்கழகம் எனும் உடலில் எந்தப் பகுதி வளர்ச்சி பெறவில்லை; எந்தப் பகுதி வலுவிழந்திருக்கிறது என்பதை அவ்வை நன்கறிவார். பொறுப்பேற்றவுடன் இலக்கிய மருத்துவரான அவ்வை நல்ல முறையில் பண்டுவம் செய்து அவராட்சிக் காலத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் பல்துறை வளர்ச்சிபெற்று வீறுகொண்டெழ வேண்டுமென்பது தமிழக அரசின் நோக்கம் மட்டுமல்ல; தமிழ்கூறு நல்லுலகத்தின் எதிர்பார்ப்பும் அதுவே.

விளையும் பயிர் முளையிலே என்பதற்கிணங்கப் பள்ளியில் பயில்கின்ற காலத்திலேயே தமிழ் இலக்கியத்தில்

191738
031ம211,N2
N92-67·4



மூழ்கித் திளைத்தவர். உரைவேந்தர் அவ்வை துரைசாமிப் பிள்ளை அவர்களின் தவப்புதல்வராக 1936 ஏப்ரல் 24ஆம் நாள் சம்புவராயர் மாவட்டத்தில் செய்யாறு எனும் ஊரில் தோன்றிய அவ்வை நடராசன் அவர்கள். தந்தையார் பணியாற்றச் சென்ற இடங்களிலெல்லாம் இவர் கல்வி தொடர்ந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரை தியாகராசர் கல்லூரி ஆகியவை தந்தையார் பணியாற்றிய இடங்கள்; எனவே சிதம்பரத்திலும், மதுரையிலும் பள்ளிக் கல்வி, கல்லூரித் தொடக்கநிலைக் கல்வி.

படிப்படியாக உயர்ந்த அவ்வைக்குப் பச்சையப்பன் கல்லூரி புதுவாழ்வைத் தொடங்கி வைத்தது; 1954ஆம் ஆண்டு தமிழிலக்கியம் பயிலச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் டாக்டர். மு. வரதராசனார் அவர்களின் மாணவரானார். பசுமை நிறைந்த கல்லூரி வாழ்வில் முகிழ்ந்து முழுமலர்ச்சியடைந்தது பேச்சுக்கலை, கல்லூரிப் பேச்சுப் போட்டி அணியில் இடம்பெற்று திருப்பத்தூரில் இன்று பேராசிரியராகத் திகழும் சொல்லின் செல்வர் பட்டிமன்ற நாயகர் பா. நமச்சிவாயம் அவர்களுடன் இணைந்து இரட்டையராகத் தமிழ்நாட்டுக் கல்லூரி மேடைகளில் தோன்றி எல்லாப் பரிசுகளையும், - கோப்பைகள், சுழற்கோப்பைகள், கேடயங்கள் அனைத்தையும் - கல்லூரிக்குக் கொண்டுவந்து குவித்தார். பேச்சுப்பணி அவர் வாழ்நாட் பணியானது.

படிப்பு முடிந்தவுடன் மதுரை தியாகராசர் கல்லூரியில் சில மாதங்கள் பணி - அகில இந்திய வானொலியில் வெளிநாட்டு ஒலிபரப்பில் செய்தி வாசிப்பாளர் பணி - சில மாதம் தில்லை வாழ்க்கை - மீண்டும் தஞ்சை சரபோசி மன்னர் கல்லூரியில் ஆசிரியர் பணி - திருக்கோவையார் பற்றி எம். லிட். ஆய்வு; திருவாசகம் பற்றி டாக்டர் பட்ட ஆய்வு; வள்ளல் நா. மகாலிங்கம் அவர்களின் அன்பழைப்பை ஏற்று இராமலிங்கர் பணிமன்றத்தில் பணி; பல்துறைகளிலும் இவர் ஆற்றிய பணி அரசுப் பொறுப்பில் இருந்தவர்களைக் கவர்ந்தது.

1975ஆம் ஆண்டில் தமிழக அரசு செய்தித் துறையில் உதவி இயக்குநர் பொறுப்பேற்று அரசுப் பணியில் நுழைந்தார். அதிலும் படிப்படியாக உயர்வு. மொழிபெயர்ப்பு இயக்குநராகப் பதவி உயர்வு. 1984ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை இவருக்கெனவே தனியாகத் தமிழக அரசுத் தலைமைச் செயலகத்தில் தொடங்கப்

பெற்றது. ஐ. ஏ. எஸ். பட்டம் பெறாமலேயே அரசுச் செயலரானார். சட்டத்துறை சட்டமன்றத்துறைச் செயலர்கள் மட்டுமே அவ்வாறு துறைச் செயலராக முடியும். மூன்றாவதாகப் புதிய துறை; கடந்த எட்டு ஆண்டுகளாகத் துறைச்செயலராகச் சீரிய பணி; தமிழ் வளர்ச்சித் துறை, தொல் பொருளியல் துறை, அருங் காட்சியகம், கீழ்த்திசைச் சுவடி நூலகம், தேவநேயப் பாவாணர் அகரமுதலித்துறை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம். தமிழ்நாடு இசைக் கல்லூரி - எட்டுத் துறைகளையும் எட்டு ஆண்டுகள் இவர் திறம்பட நடத்திய பெருமையைப் பாரே அறிந்து வியந்ததுண்டு.

மதுரை உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியதில் இவருக்கும் பங்குண்டு. மொரீசியசு உலகத் தமிழ் மாநாட்டுக்குத் தமிழக அரசு அணித்தலைவர் இவரே. இவருடைய பெருமை கடல் கடந்தது. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் இவர்தம் இலக்கிய அன்பர்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர்.

இவ்வளவு சிறந்த பின்னணியுடன் துணைவேந்தராகப் பொறுப்பேற்கும் டாக்டர். அவ்வை நடராசன் அவர்களை உளமாரப் பாராட்டுகிறோம். இவருடைய வளர்ச்சியில் கழக மேனாள் ஆட்சியாளராகத் திகழ்ந்த தாமரைத்திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களுக்குப் பெரும் ஆர்வம் உண்டு. தந்தையாரையும் தனயனையும் ஒரு சேரக் கண்டு பேசிப் பழகியவர் அவர். இவர் இந்தப் பொறுப்பை ஏற்பதைக் காண உரைவேந்தர் இல்லையே! கழக மேனாள் ஆட்சியர் இல்லையே! திருவாசகமணி இல்லையே! தமிழ்க் கடல் ராய. சொ. இல்லையே! பேரறிஞர் அண்ணா இல்லையே! டாக்டர். மு. வ. இல்லையே! டாக்டர். தெ. பொ. மீ. இல்லையே! சொல்லின் செல்வர் ரா. பி. சே. இல்லையே! டாக்டர் ஏ. சி. செட்டியார் இல்லையே! பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் இல்லையே! மாண்புமிகு புலவர் கோவிந்தன் இல்லையே! வெள்ளை வாரணனார் இல்லையே! டாக்டர். வ. சுப. இல்லையே! குடந்தை சுந்தரேசனார் இல்லையே என்று வருந்தினும் வானுலகத்திலிருந்து அவர்கள் அவ்வை நடராசன் அவர்கள் துணைவேந்தர் பொறுப்பு ஏற்பதைக் கண்டு வாழ்த்தி மகிழ்வார்கள் என்ற வகையில் நாமும் வாழ்த்தி மகிழ்வோம்.

---

## மரபியல் ஆராய்ச்சி

கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன

(சிலம்பு—கஎ, பக். அஅ-இன் தொடர்ச்சி)

ஓரறிவு முதல் ஆறாம் அறிவு வரை உயிரிகள் வளர்ந்த வகை இது. இதனைத் தெள்ளிதின் உணர்ந்த திருவள்ளுவர்:

''கண்டு கேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள''

என்றும்,

''சுவையொளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு''

என்றும் உரைத்தார்.

இனி, இவ்வுயிர்ப் பகுப்பு கொண்டு ஆசிரியர் தொல் காப்பியனார் சமண சமயத்தார் என்று கருதுவாரும் உளர். சமண சமயம் சார்ந்தவராகத் தொல்காப்பியர் இருந்திருப் பாரேயானால் ஆறாம் அறிவு பற்றிக் கூறியிருக்கவே மாட் டார்; ஐயறிவு முடிவே சமண சமய முடிவாம். இவர்க்குப் பின்னால் நூல் செய்த நன்னூலார் ஐயறிவுரைப்பதோடு அமைந்தார்.

''வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்
ஆதி செவியறிவோ டையறி வுயிரே''

என்பது அவர் நூற்பா. தொல்காப்பிய வழியில் பெரும் பாலும் ஒத்து நூல் செய்த நன்னூலார் சிறுபான்மை விலகிச் செல்லும் இடங்களில் இவ்வையறிவுக் கொள்கை கூறுமிடமும் ஒன்றாம். தொல்காப்பியர் சொல்லிய ஆறறிவுக் கொள்கை கூறுமிடமும் ஒன்றாம். தொல்காப்பியர் சொல்லா தவை சிலவற்றையும் சொல்லிச் செல்லும் நன்னூலார், தொல்காப்பியர் சொல்லிய ஆறறிவுக் கொள்கையை வலிந்து விலக்கி, ஐயறிவுக் கொள்கையில் அழுந்தி நின்று உரைத்தமை அவர் தம் சமண சமயப் பிடிப்பாலேயேயாம். அப்பிடிப் புடையாராகத் தொல்காப்பியனார் இருந்திருப்பரேல் ஆறாம் அறிவு பற்றி உரைத்திருக்க மாட்டாரே.'

இனி, மரபியல் கூறவந்த தொல்காப்பியர் முதற் கண்ணே உயிரிகளுக்குரிய அறிவு வளர்ச்சி நிலையையும், இவை இவை இவ்வறிவின என்பதையும் சொல்லியிருத்தல் தகும். இளமைப் பெயரை உரைத்து அதன் நிறைவில் இயலை இடைமடுத்து இதனை உரைக்க வேண்டியதேன் என்னும் வினா எழக்கூடும்.

பருப்பொருளை விளக்கிப் பின்னை நுண்பொருளைக் கூறல், அல்லது காட்சிப் பொருளை விளக்கிக் கருத்துப் பொருளைக் கூறல் கற்பார்க்கு ஆர்வமும் உவப்பும் ஆக்கி அறிதிறத்தைப் பெருக்க உதவுமாகலின் அம்முறையை மேற்கொண்டு உரைத்தார். அன்றியும், இளமை ஆய்வு இன்பச் சுரப்பின் தனிமையம் ஆகலின் அதனை முற்பட உரைத்து, அவ்விளமை முதலியன உயிர்களுக்கே ஆகலின் அவற்றின் அறிவுத் திறவளர்ச்சியை அடுத்துக் கூறல் தகுமாகலினும் கூறினார்.

இனி, உயிரிகளுக்கு உரிய இளமை, ஆண்மை, பெண்மை என்பவற்றை முற்பட வகுத்தாங்கு ஓதி, நூன் முடிவில் உயிர்களின் பாகுபாட்டை உரைத்திருக்கலாம் எனின் அது முறையன்றாம்.

இளமை, உயிர்களின் பொதுத்தன்மை சுட்டும். இளமையின் நிறைவிலே, "பிள்ளை குழவி கன்றே போத் தெனக் கொள்ளவும் அமையும் [1] ஓரறிவுயிர்க்கே" என்றும் "நெல்லும் புல்லும் நேரார் ஆண்டே" என்றும் (24,25) நூற்பா யாத்து வைத்தமையின், அதனை யடுத்து,

"ஒன்றறிவதுவே உற்றறிவதுவே"

என்றும்,

"புல்லும் மரனும் ஓரறி வினவே"

என்றும் கூறுதல் நனிமிகு முறைவைப்பாயிற்றாம்.

இனி உயிரிகளின் உடலமைப்பு, பயன்பாடு ஆயன கொண்டு, ஆண் பெண் என வேறுபடுத்திக் காட்டலின்

1 "மேல் ஓரறிவுயிரெனத் தோற்றுவித்தார். அதனானே இச்சூத்திரங்கள் ஈண்டுக் கூறப்பட்டன" என்றார் இளம்பூரணர். மர 34.



பொதுமையின் விலக்கிய சிறப்புடைய அவற்றைத் தனித் தனிப் பிற்படக் கூறல் முறைமையாயிற்றாம்.

இளமைபோலவே இன்பமும் மென்மையும் மல்கியது பெண்மையாகலின் ஆண்மையினும் அதனை முற்படக் கூறல் தகும் எனின், கூறலாம். ஆயின் வழிவழி முறை ஆண்மையின் அரவணைப்பிலே பெண்மை இருத்தலும், ஆண்மை பெண் மையைக் காத்தோம்பும் வன்மையது ஆதல் இயற்கையாத லாலும் ஆண்மையை முற்படக்கூறல் வேண்டிற்றாம்.

பெண்மையை முற்படக் கூறாமை பெண்மையின் பெருமைக்குக் குறைவாகாதோ எனின் குறைவாகாதாம். முற்படப் பிற்படக் கூறலின் ஒரு சிறப்பில்லை என்பதை அறிவுறுத்துதற்கன்றே, 'சிறப்புடைப் பொருளை முற்படக் கிளத்தல்' என்றும், 'சிறப்புடைப் பொருளைப் பிற்படக் கிளத்தல்' என்றும் இருவகையாகவும் தமிழாசிரியர்கள் வகுத்துக் காட்டினர். ஆகலின், பெண்மையைப் பிற்பட வைத்தமை சிறப்பின்மை கருதியன்றாம்,

பண்டு தொட்டு இந்நாள்வரை எந்நாட்டாரும் எச்சமயத்தாரும் எவ்வினத்தாரும் எக்குலத்தாரும் மணவினை நடாத்தப் புகுங்கால் ஆண்மகனை முற்பட அழைத்து வைத்து அவனொடு பெண்மகளை இயைத்து வைப்பதே வழக்காறாக இருத்தலின் ஆணும் பெண்ணும் என முறை வைப்புச் செய்தலில் குறைவு ஒன்றுமின்றாம்.

'பெண்ணிற் பெருந்தக்கது இல்' என்பது வள்ளுவம். 'பிணையும் பெண்ணும் பெட்பின் பொருள' என்பது தொல் காப்பியம். இத்தகு பெருமை வழியில் வந்த வழிமுறையைப் பிற்காலப் போலித்துறவியரும், அப்போலித்துறவியர் வழியில் தோய்ந்து, வேற்றுப்புலத்தவர் கொள்கையைத் தமிழர்மேல் திணிப்பதே தம் அறிவுப் பயன் எனக் கண்ட உரையாசிரியன்மாரும் உரைத்தவற்றைக் கொண்டு ஒரு முடிவுக்கு வரவேண்டியதில்லையாம்.

ஆ. இடைச்செருகலும் இடையீட்டுச் செருகலும்

ஓரறிவுயிர்க்கே (24) நெல்லும் புல்லும் (25) என்றவர் "ஒன்றறிவதுவே" (27) என்று தொடர்ந்தவர் அப்புல்லையும் மரத்தையும் பற்றிய விளக்கத்தை எங்கே வைப்பார்? வைப்புமுறை முழுதொத்து வரன்முறையாய்ப் பேணும் வண்டமிழ் ஆசிரியர் தாமரை இவ்விடத்தை விடுத்து, ஆண்

பாற்பெயர் பெண்பாற்பெயர்களை விளக்கிப் பின்னும் தள்ளி 86 ஆம் நூற்பா தொடங்கி வைப்பார்? மனம் போனபடி வைப்புமுறை மாற்றி, செறிப்பன செறித்து ஒழிப்பன ஒழித்து மரபியலில் பிறர் பிறர் பெருந் திருவிளையாடல் புரிந்துள்ளனர். அவ்வாறு புரிந்தாரும் உரை கண்ட இளம்பூரணர் காலத்திற்கும் முற்படவே புரிந்துள்ளனர். அவரும் அவர்க்குப் பின்னே உரை கண்டாரும் மூல நூலை ஆசிரியன் கருத்தென்றே முழுதும் ஏற்குமாறு அமைத்துள்ளனர். ஆகலின் உரையாசிரியர்கள் உரைகாண்டற்குப் படும் இடரும், வைப்புமுறை காட்டுதற்குப் படும் இடரும் பெரிதாம்.

அடிச்செருகல் :

உயிர்களின் பாகுபாடு கூறும் இப்பகுதியை உற்று நோக்கின் இடைச்செருகலுடன் விடுபாட்டமைப்பும் விளங்கும்.

''புல்லும் மரமும் ஓரறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே''

என ஓரறிவுடையவற்றைச் சுட்டியமுறையே முறையாக ஐயறிவுடையனகாறும் ஆசிரியர் கூறினார்.

''மாவும் மாக்களும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே''

என்பது ஐயறிவுடையன கூறும் நூற்பா.

''அதனை அடுத்து ஆறாம் அறிவுடைய மாந்தரைச் சுட்டும் ஆசிரியர்,

''மக்கள் தாமே ஆறறி வுயிரே''

என்று அமைந்தாராதல் வேண்டும். ''மக்கள் தாமே'' எனத் தேற்றேகாரம் தந்து உரைத்திருந்தாராகவும், இடைச் செருகலார் ''பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'' என ஒட்டுவேலை செய்துவிட்டனர். முன் ஐந்து நூற்பாக்களின் அமைதி என்ன? ஆறாம் நூற்பாவின் அமைதி என்ன? மின் ஐந்து நூற்பாக்களிலும் 'ஓரறிவினவே' ஈரறிவினவே' என்பன முதலாகக் கூறியவர். 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என முற்றுவித்தலை உணரவேண்டாவா? தட்டுக் கெட்ட ஒட்டையா ஒட்டுவது?



ஆசிரியர் கருத்து அக்கிளைப் பிறப்பெனக் கூறுவது

''மக்கள் என்பார் ஆறறி வினரே
பிறரும் உளரே அக்கிளைப் பிறப்பர்''

என்றல்லவோ நூற்பா யாத்திருப்பார்? உயர்திணை அஃறிணை முடிவுகள் அறியாதவரா அவர்?

''உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே:
அஃறிணை என்மனார் அவரல பிறவே'',

என நூற்பா யாத்துள்ள ஆசிரியர் தாமா, திணைநிலை திறம்பிய யாப்பினை மேற்கொண்டிருப்பார்?

''பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே''

என்பதால் வந்த கேடென்ன?

உரையாசிரியர்கள் மயங்கினர்; பொருந்தா உரைகள் உரைத்தனர்; பின்னை நூலார்கள் மனம் போனவாறெல்லாம் நூற்பா யாத்துக் கொண்டு குழப்பினர்.

''பிறவாவன தேவர் அசுரர் இயக்கர் முதலாயினோர் பிறப்புக்கள்' என்றார் இளம்பூரணர். அவரே ''ஒருசார் விலங்கும் உளவென மொழிப'' என ஒரு நூற்பாவை அடுத்து வைத்து, ''விலங்கினுள் ஒருசாரனவும் ஆறறிவுயிராம் என்றவாறு'' என்று பொருள் கூறி, ''அவையாவன கிளியும் குரங்கும் யானையும் முதலாயின'' என்று விளக்கம் வரைந்தார்.

பேராசிரியரோ ''பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'' என்பதற்குக், ''கிளையெனப்படுவார் தேவரும் தானவரும் முதலாயினார்'' என்றார். ''குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையன எனப்படும். மனவுணர்வுடையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவுயிராய் அடங்கும் என்பது'' என்றும் உரைத்தார்.

''வாலி சுக்கிரீவன் அநுமன் முதலிய குரங்குச் சாதிகள் ஆறறிவுடையனவாக இராமாயணத்துட் கூறப்படலின் இவ்வாறு கூறினார் போலும்'' என இதற்குக் குறிப்புரை வரைந்தார், தொல்காப்பியப் பதிப்பாசிரியர் சி. கணேசையர்.

நன்னூலாரோ,

''வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்
ஆதிசெவி யறிவோ டையறி வுயிரே''

என்றும்,

''மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயி ருள்ளவும் இல்லவும் அஃறிணை''

என்றும் நூற்பாக்கள் அமைத்துக்கொண்டார். அவர்க்குப் பின்னூலாரும் உரையாரும் பிறரும் இம்முறையில் ஒன்றி விட்டனர். 'ஒரு குற்றம் ஒன்பது குற்றத்திற்கு இடமாம்' என்பதை நிறுவுவது இச் செருகலாம்.

**புறத்தே தள்ளலும் அகத்தே செறித்தலும் :**

இனிப், புல் மரம் பற்றிய விளக்கமும் உறுப்பும் எங்கே இருத்தல் வேண்டும் ?

ஆறறிவு உயிர்வரை அடுக்கிய இவ்விடத்து இருத்தல் அன்றோ இயைபு? ஏன் 33இல் இருந்து 86 ஆம் நூற்பாவுக்குத் தாவியது? ''நூலேகரகம்'' எனத் தொடங்கும் நூற்பா முதல் (71) ''அன்னராயினும்'' என்னும் நூற்பா முடிய மரபியற்கு எல்வாற்றானும் பொருந்தாத போலிப் பொருள் களை ஊடே செறித்து நூலாசிரியன் தலையில் இறுக்கிக் கட்டிவிடுவதற்குச் செய்த ஏற்பாடேயாம்! அவற்றின் ஒட்டா ஒட்டை அவண் காட்டுதும். வேண்டாதவற்றைச் செறித்தற்கு வேண்டியவற்றைத் தள்ளி ஒதுக்கினர்! வீட்டுக் காரனுக்கு எவ்வளவு உரிமையானவனாக இருந்தாலும், விருந்து மேற்பார்வையாளன் நினைத்தால் எவரையும் எழுப்பி எக்கடைகோடிக்கும் தள்ளி எவரையும் முதன்மைக்குக் கொண்டுவந்து விடலாமல்லவோ! அப்பணியே நிகழ்ந்திருக் கிறது என்க. ஆனால் 'உடையாய் என்னைக் கண்டு கொள்ளே' என்று சொல்லிவிடுகின்றனவே போலி நூற்பாக்கள் !

இச்செருகல்கள் நுண்ணிதின் ஆய்வோர்க்குத் தம்முகம் எளிமையாகக் காட்டிவிடுகின்றன என்பதை இலக்கண விளக்கத்தின் வழியேயும் கண்டு கொள்ளலாம், ஆனால், இலக்கண விளக்க ஆசிரியர், 'இடைச் செருகலாகக் கருதாமல், 'இடையீடாகக் கருதினார், என்பது அவர்தம் வைப்பு முறையால் புலப்படுகின்றது.

'புல்லும் மரனும்' எனத் தொடங்கும் அவர் (193) அவ்வொழுங்கிலேயே 'தோடே', 'மடலே' 'காயே' (920-22) என்பவற்றை இயைய வைத்தமை காண்க. இவற்றின் பின்னரே 'நூலே கரகம்' முதலியவற்றை வைத்ததும் அறிக. (924-28).

# ''சந்ததமும் அடியார்கள் சிந்தையது குடியானவன்''

[திருப்புகழ்]

தமிழகக் கோயில் கலைச் செல்வர்
தி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்., விசாரத், பொள்ளாச்சி.

சிவபெருமானுக்கு உரிய சிறப்பான அடையாளங்களில் ஒன்று கபாலம். இதனால் அவன் கபாலி என அழைக்கப் பெறுகிறான். ''கள்ள மதித்த கபாலங் கைதனிலே மிக ஏந்தி'' எனச் சம்பந்தப் பெருமான் போற்ற, ''கண்பல உக்க கபாலம் அங்கை கொண்டு'' என அருளியுள்ளார் அப்பர் சுவாமிகள். ''கையது கபாலம்'' என்பது சுந்தரர் திருவாக்கு.

இறைவன் இன்னிசைக் கருவிகளை இசைப்பதில் இணை யற்றவன். வீணை அவனுக்கு மிகவும் உகந்தது. எனவே அவனை ''வீணையன்'' என்பர் திருவருட் செல்வர்கள். ''பண்ணுலாம் பாடல் வீணை பயில்வானோர் பரம யோகி'' என அழகுற அழைக்கிறார் சம்பந்தப் பெருமான். ''முனி கணங்கள் புடைசூழ முற்றந்தோறுந் தெறித்து ஒரு வீணைய ராய்ச் செல்வார்'' என்று அப்பர் பெருமான் பிச்சை ஏந்தச் செல்லும் பாங்கினை எடுத்து உரைக்க, ''வித்தக வீணை யோடும்'' எனச் சுந்தரர் அருளியுள்ளார்.

சிவபெருமான் கையில் ஏந்தியுள்ளது பிரமனது கபாலம். தன் முழுமுதல்தன்மை, என்றும் நிலைபெற்ற தன்மை ஆகிய வற்றை உலகோர் உணர, படைத்தற் கடவுளின் மண்டை யோட்டினை அவன் தன் கையில் கொண்டுள்ளான்.

ஊழிக் காலத்து உலகங்களை ஒடுக்கிய பின், அவை மீள வரும்படி இறைவனிடத்து வரும் நாத தத்துவன் வீணை என்பர் ஆன்றோர். மேலும் மிக உயர்ந்த இசையைத் தோற்றுவிப்பதும் வீணையாம். இதனை,

''உலகம் எல்லாம் ஒடுங்கியபின்
வேதத்து ஒலிகொண்டு வீணை கேட்பார்''

என்றும்,

''பெருங்கடல் மூடிப் பிரளயங்
கொண்டு பிரமனும் போய்
இருங்கடல் மூடி இறக்கும்
இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமுங்
கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீள நின்று
எம்மிறை வீணை வாசிக்குமே''

என்றும் அப்பர் அடிகள் அற்புதமாக அருளியுள்ளார்.

சிவபெருமானும் அறுமுகனும் ஒன்றே என்பர் ஆன்றோர். ''ஆறுமுகத்தில் அதிபதி நான் என்னும்'' என்பது திருமூலர் திருவாக்கு. சிவபெருமானின் சிறப்பான அடையாளங்களான கபாலத்தையும், வீணையையும் உடைய முருகப் பெருமானைக் காண வேண்டின், சிறுவாபுரி செல்ல வேண்டும்;

சென்னையினின்றும் கும்முடிப்பூண்டி செல்லும் பாதையில் முப்பத்தைந்தாவது கிலோ மீட்டர் தொலைவில் சிறுவாபுரி உள்ளது. இது தற்காலத்தில் சின்னம்பேடு என்று அழைக்கப்பெறுகிறது. இங்கு எழுந்தருளியுள்ள முருகப் பெருமான்மீது அருணகிரிப் பெருமான் நான்கு திருப்புகழ்ப் பாடல்கள் பாடி அருளியுள்ளார். ''சந்ததமும் அடியார்கள் சிந்தையது குடியான பெருமாளே'' என இவனைச் சிறப்பித்துள்ளார்.

இங்கு இரு துணைவியருடன் கூடிய உற்சவப் பெருமானது நான்கு கைகளில் முன் இடக் கையில் கபாலம் காணப்பட, பின் இடக் கையும், முன் வலக் கையும் வீணையை ஏந்தும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளன. கலை அழகு கொஞ்சும் காண்போர் வியக்கும் படைப்பு.

ஆகமங்களில் கூறப்பட்ட வேற்படை விமலனின் எந்தத் திருவுருவிற்கும் கபாலமோ அல்லது வீணையோ விதிக்கப் படவில்லை. எனவே இஃது ஒரு அரிய கலைப் படைப்பாகும்.

---

## பெண்பாற் புலவர்கள்

புலவர் பொன். தெய்வநாயகசோதி, சென்னை-21.

''மங்கையராய்ப் பிறப்பதற்கே, நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா'' என்று கவிமணி பாடியதைக் கேட்டு மகிழ்கின்றோம். மாதவம்: பெரிய தவம். பெரிய தவத்தைச் செய்தவர்களே மங்கையர்களாகப் பிறந்துள்ளனர் என்கின்றார்.

மாதவம் பெற்றவர்களா நாம்? எண்ணிப் பார்ப்போம். நீண்ட நெடுங்காலத்திற்கு முன் சங்க இலக்கியங்கள் மூலமாக மகளிர் சிறப்பாக வாழ்ந்தனர் என்பதை அறிகின்றோம். அவர்கள் குண நலன்களில் மேம்பட்டு இருந்தனர்; புகழ் பெற்றும் வாழ்ந்தனர்; பொது நலம் பேணி வாழ்ந்தனர்; இல்லறத்தை நல்லறமாக நடத்தினர். பிணக்குகள் வந்தபோதும் துணிவாகத் துறவற நெறியில் நின்று தம் கடமைகளை ஆற்றினர்.

''நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை''

என்ற எட்டு நூல்கள் மூலமாக மகளிரின் மாண்பை உணர்கின்றோம்.

ஔவையாரைப்பற்றி நமக்கு நன்றாகத் தெரியும்; ''இல்லற மல்லது நல்லற மன்று'' என்று பாடியவர். ஆனால் ஔவையாரோ இல்லறத்தில் இருக்கவில்லை. அப்படி இருந்தும் இல்லறத்தை நல்லறமாக நடத்துங்கள் என அறிவுரை பகர்ந்தார்.

''இல்லறத்தைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? நீ துறவியாயிற்றே'' என்று யாரும் அவரிடம் துணிவாகக் கேட்கவில்லை. அவரின் அறவுரைகளின்படி வாழ்ந்தனர் எனும்போது ஔவை சொல்லைத் தட்டாதவர்கள் வாழ்ந்தனர் என்பதையும், அவரைப் பெண் என்ற கண்ணோட்டத்தை விடுத்து மிகப் பெரிய பெண் ஞானியாக மதித்துப்

பணிந்தனர் என்பதையும் உணர்ந்து ஔவையாரின் ஆற்றலை எண்ணி வியக்கின்றோம்.

அம்மட்டோ? இரு நாட்டிடையே போர் நிகழ அதனைத் தடுக்க முனைந்து தொண்டைமான் எனும் மன்னனிடம் செல்கின்றார். அவனோ இப்போது போர்புரிய விரும்பி ஏற்பாடு செய்துள்ளான். இதுதான் அவனின் கன்னிப்போர். தன்னோடு போர் தொடுக்கும் மன்னனின் ஆற்றலை உணராது போர் அறிவிப்புச் செய்து விட்டானே என வருந்தி, அவனிடம் செல்கின்றார். அவன் ஔவையை வரவேற்று வாள்களையும், தன்வீரத்தையும் மிகைப்படுத்திக் கூற, ஔவையோ நகைத்து, "மன்னா, உன்னை எதிர்க்கும் மன்னன் அதியமான் வேல்கள் யாவும் கூர் மழுங்கியும், குருதிக் கறை படிந்தும் கொல்லன் உலைக்களத்தில் செப்பனிடச் சென்றுள்ளன. அவனின் மார்போ புறமுதுகு காட்டாது கூரிய வாள்களைத் தாங்கிப் புண்ணாக உள்ளது"- எனப் பக்குவமாக எடுத்துரைக்கின்றார். நீயோ போருக்கும் புதியவன். அவனோ போர் முனையிலிருந்து கொண்டிருப்பவன் என அவனின் வீரத்தையும் எதிரியைத் தாக்கி வேல்கள் கூர் மழுங்கியிருப்பதையும் எடுத்துரைத்து, அவனிடம் போரிட்டால் நீ தோற்பது உறுதி என்ற எண்ணத்தை மறைமுகமாக உணர்த்துகின்றார்.

இவனும் போரினால் வரும் விளைவுகளையும், தன் தவற்றையும் உணர்ந்து போரை விடுத்தான்.

தாம் ஓர் எளிய பெண் என்றோ, தம்மால் போரை நிறுத்த இயலுமா என்றோ, அரசர்கள் தம் அறிவுரையைப் பொருட்படுத்துவரோ என்றோ ஔவை தயங்கியிருக்கவில்லை; துணிவாக இருவரிடையே சமாதானம் நிலவச் செய்தார். இவ்வாறு ஔவை போர் நிறுத்திய திறம் அறிந்து வியக்கின்றோம்.

அதனாலல்லவா அதியமான் தனக்குக் கிடைத்த அதிமதுர நெல்லிக் கனியைத் தமிழ்த் தொண்டாற்றிய மூதாட்டிக்கு ஈந்து வாழ்நாளை நீடிக்கச் செய்தான்! முருகப் பெருமானும் ஔவையிடம் சொல் விளையாடினான். ஔவைக்குச் சமமாகவும், ஏன் மேற்பட்டும், பல பெண்பாற் புலவர்கள் பாடிய செய்யுட்கள் 150 கிடைத்துள்ளன. ஔவைக்கு அடுத்து வெள்ளி வீதியார் என்னும் புலவர் பெருமாட்டி 13 பாடல்களைப் பாடியுள்ளார்.



"யானே காதலர்க் கெடுத்த சிறுமையோடு நோய் கூர்ந்து ஆதிமந்தி போலப் பேதுற்று அலந்தனன்"—இச் செய்யுள் மூலம் ஆதிமந்தியின் வரலாற்றையும் அறிகின்றோம். "காவேரி ஆற்றின் கரையில் கணவனாகிய ஆட்டனத்தியைத் தேடி அலைந்த ஆதிமத்தியைப்போல யான் வேதனைப் படுகின்றேனே" என்பது பொருள்.

ஆதிமந்தியின் வரலாறு இலக்கியத்தைக் கற்றோர் பலரும் அறிந்ததே! ஆனால் வெள்ளிவீதியாரின் வரலாறு நமக்குத் தெரியாது. தெரியாதத தன் வரலாற்றைத் தெரிந்த வரலாறோடு இணைத்துக் கூறிய நுட்பம் பாராட்டத்தக்கது.

காக்கைப் பாடினியார் என்ற பெண்ணரசியார் பன்னிரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்.

"காகம் கரைந்தால் விருந்து வரும்"

என்பது பழமொழி.

அந் நாளைய வழக்கம் இந்நாளிலும் நீடித்து உள்ளதே. இன்றும் காகம் கா கா என கரைந்தால் விருந்தினர் வருகை நிகழ்கின்றதே!

"விருந்து வரக் கரைந்த
காக்கையது பலியே"

என்பது இவர் இயற்றிய குறுந்தொகைப் பாடலின் வரிகள். இவரின் இயற்பெயர் தெரியவில்லை. காக்கையைப் பாடிச் சிறப்பித்தார் என்று மக்கள் இவருக்குக் காக்கை பாடினியார் என்றே பெயரிட்டுவிட்டனர் போலும்.

யாப்பில் சிறந்த நூல் ஒன்றையும் இவர் இயற்றியுள்ளார்.

பெண்பாற் புலவர்கள் பெயர்கள் சங்க இலக்கியங்களில் நற்றமிழில் அமைந்துள்ளன. பொருள் பொதிந்த பெயர்களும் உண்டு.

ஒக்கூர் மாசாத்தியார், அள்ளூர் நன் முல்லையார், நக்கண்ணையார், நப்பசலையார், பொன்முடியார், பொன் மணியார், முடத்தாமக் கண்ணியார், நல்வெள்ளியார், வெண்ணிக்குயத்தியார், குமுழி ஞாழலார் நப்பசலையார், பூங்கண் உத்திரையார்;

நாமும் நம் பெண் குழந்தைகளுக்கு இவ்வாறு பொருள் பொதிந்த தமிழ்ப் பெயர்களையே சூட்ட வேண்டும். பொருளில்லாத பெயர்களைச் சூட்டினால் அவர்கள் பேசுகின்ற பேச்சுக்களும் பொருளில்லாமல் போகின்றன அன்றோ?

குறுந்தொகைப் பாடல் ஒன்றை முழுமையாக ஆராய்ந்து பார்ப்போம்: நகைச்சுவையுடைய சிந்திக்கத் தூண்டும் பாடலாகும்.

ஒருவன் ஒருத்தியை மனமார விரும்பிப் பல எதிர்ப்புகள் ஏற்பட்டும் தளராது திருமணம் புரிந்தான். வாழ்க்கை இன்பமாகத் தேனாக இனித்தது. நெருஞ்சிச் செடி பூக்கும் போது அழகாக சிறிய மஞ்சள் பூவாகப் பூக்கும். கண்ணிற்கும் மனத்திற்கும் இன்பம் அளிக்கும்.

''ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம்
கூடி முயங்கப் பெறின்''

என்ற முறையில் ஊடியும் கூடியும் இன்பவாழ்க்கை வாழ்ந்தனர்.

(தொடரும்)

## பாரில் வாழியவே!

நாஞ்சில் கா. கணபதி

அவ்வைநட ராசர் பணிகண்டு
அகமகிழ் வோருள் நானொருவன்;
எவ்வெவர் தன்மையும் நன்கறிந்து
ஏற்றம் கொடுக்கும் சீராளர்
செவ்வை நூல்கள் பற்பலவும்
சீராய்க் கற்ற பேரறிஞர்
திவ்விய தமிழ்ப்பல் கலைக்கழகத்
துணைவேந்த ரானார்; மகிழ்கின்றேன்.

இதுவரை பதவிகள் பலகண்டார்
இனியன பலர்க்கும் ஆற்றிவந்தார்
பதவிகள் பலவும் வழிகேட்டுப்
பாங்காய் அவரைச் சார்ந்தனவே
இதனை இதனால் இவர் முடிப்பர்
என்று சொல்லுக் குரியரவர்
பதவிகள் இன்னும் பலபெற்றுப்
பாரில் வாழிய வாழியவே!

## இலர் பலர் யார்?

திரு. பா. வீரமணி

''இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். (270)

இக்குறள், அறத்துப்பாலில் துறவறவியலில் 'தவம்' அதிகாரத்தின் இறுதியில் உள்ள குறளாகும். இக்குறளுக்கு அன்று தொட்டு இன்று வரை எழுதப்பட்ட உரைகள பொருத்தமான உரைகளாக இல்லை ஒன்றிரண்டு உரைகள் ஓரளவு பொருந்துவனவாக உள்ளனவேயன்றி அவையும் முழுதும் பொருந்துவனவாக இல்லை. இக்குறளுக்கு உண்மை உரை எது என்பதை இனிக் காண்போம். மேற்கண்ட குறளுக்கு மணக்குடவர் ''பொருளில்லாதவர் உலகத்துப் பலராதற்குக் காரணம் தவம் செய்வார் சிலராதல்; அது செய்யாதார் பலராதல் என்றவாறு'' எனப் பொருள் கொண்டார். இவரைப் பின்பற்றியே, பரிதியாரும், பரிமேலழகரும் உரை கண்டனர். இந்நூற்றாண்டில் வாழ்ந்த பேராசிரியர்கள் பலரும் ஆழச் சிந்தியாமல் அவ்வாறே பொருள் கொண்டுவிட்டனர். நம் காலத்தின் வாழ்ந்த பேராசிரியர் கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்களும், ''வறியவர்கள் பலராதற்குக் காரணம் யாதெனின் தவம் செய்பவர் சிலர்; தவம் செய்யாதவர் பலர் என்பதே'' (திருக்குறள் பொழிப்புரை - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் - சென்னை - 1928) என உரை கண்டார். பேராசிரியர் கா. சு. பிள்ளையவர்களைப் பின்பற்றியே புலவர் குழந்தை, டாக்டர் வ. சுப. மாணிக்கம், தேவநேயப் பாவாணர், சாமி. சிதம்பரனார், திருக்குறளார் முனுசாமி ஆகியோர் பொருள் கொண்டனர். மற்றும் பலரும் அவ்வாறே பொருள் கொண்டு விட்டனர். பேராசிரியர் கா. சு. பிள்ளை உரை எழுதிய காலத்தில், தமிழ் நாட்டில் திருக்குறள் ஆய்வுகள் போதுமான அளவுக்குப் பெருகியிருக்கவில்லை. அக்காலத்தில், திருக்குறளைப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய அளவில்தான் கா. சு. பிள்ளை உரை கண்டார்! அந்நிலையில் பொருந்தா உரை விரவுவது இயல்பே. ஆனால் அறுபதுகளில் திருக்குறளைப் பற்றிய ஆய்வுகள் பல்லாற்றானும்



191738

பல்கிப் பெருகியிருந்தன. ஆயிரக்கணக்கான நூல்களும் பல உரைகளும், எண்ணற்ற கட்டுரைகளும் வெளிவந்த காலம் அக்காலம். அவ்வாண்டுகளில், திருக்குறளுக்குப் பெரிதும் சரியான உரை காண வாய்ப்புகள் பல உண்டு. இருப்பினும், நம் பேராசிரியர்கள் ஆழ்ந்த கவனம் செலுத்தாத காரணத்தால் பல குறட்பாக்களுக்குப் பொருந்தா உரைகள் தோன்றி விட்டன.

மேற்கண்ட குறட்பாவில் 'இலர்' என்பதற்குப் பொருள் இல்லாதவர் என்றே பலரும் பொருள் கொண்டு விட்டனர். இன்னுஞ் சிலர் ஞானம் இல்லாதவர் என்றும் பொருள் கொண்டனர். இவற்றை ஆய்வதற்கு முன்பு டாக்டர் இலக்குவனாரின் உரையைச் சற்றுக் காண்போம்.

''அறிவில்லாதவர் பலராகவும், அறிவுடையோர் சிலராகவும் இருப்பதன் காரணம் தவம் செய்வோர் சிலராகவும், தவம் செய்யாதவர் பலராகவும் இருப்பதே'', (தவம் செய்வோர் அறிவுடையராவர். தவம் செய்யாதவர் அறிவற்றவர் ஆவார்). (சி. இலக்குவனார் - திருக்குறள் எளிய பொழிப்புரை - பக். 56 வள்ளுவர் பதிப்பகம் - 1963 - புதுக்கோட்டை). டாக்டர் சி. இலக்குவனாரின் உரைப்படி, தவம் செய்பவர்கள்தாம் அறிவுடையோர். ஏனைய இல்லறத்தார் அறிவற்றோர் எனப் பொருள் ஆகிவிடுகிறதன்றோ! கல்வி, கல்லாமை, அறிவுடைமை, சொல்வன்மை, புல்லறிவாண்மை, அதிகாரங்களில் அறிவை இல்லறத்தாருக்கு வலியுறுத்திய வள்ளுவர், தவம் செய்யாதவரை அறிவற்றவர் என்று கூறியிருப்பாரா? மேலும், 'புல்லறிவாண்மை' அதிகாரத்தில்,

''அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு'' (841)

என அறிவின்மையின் கேட்டைக் கூறி, எதிர்மறையாக அறிவுடைமையை இல்லறத்தார்க்கு வலியுறுத்திய வள்ளுவர், டாக்டர் சி. இலக்குவனார் கூறியது போன்று, கருதியிருப்பாரா? டாக்டர் சி. இலக்குவனார், திருக்குறளில் ஆழ்ந்த ஈடுபாடும் புலமையும் உள்ளவர். ''குறள் நெறி'' எனும் இதழ் நடத்தியவர்: அவர் எழுதிய நூல்களுள் திருக்குறளைப் பற்றி எழுதிய நூல்களே மிகுதி. மேடை தோறும் திருக்குறளைப் பற்றிப் பேசுவதே அவர்தம் இயல்பு: அவர், வள்ளுவத்திற்கு முரணான உரையை எப்படி



வகுத்தார் என்பது புதிராகவே உள்ளது. முதலில் 'இலர்' என்பதற்குப் பொருள் இல்லாதவர் அல்லது வறியவர் எனப் பொருள் கொண்டது சரியா? என்பதைக் காண்போம். இக்குறட்பா துறவற இயலில் தவம் அதிகாரத்தில் உள்ளதால், 'இலர்' என்பது பொருள் இல்லாதவரைக் குறிக்குமா என்பதைச் சற்று நோக்க வேண்டும். 'இலர்' என்பது பொருள் இல்லாதாரைக் (வறியவர்) குறித்து வந்திருந்தால், தவத்தை மேற்கொண்டவர்கள்தாம் செல்வர்களாக இருக்க முடியுமென்றும், தவத்தால் மட்டுமே பொருள் ஈட்டமுடியுமென்றும் ஆகிறது. வள்ளுவர், திருக்குறளில் துறவிகள் செல்வர்களாக இருந்தார்களென்றோ, அவர்கள் நோன்பினால் பொருள் ஈட்டினார்களென்றோ எங்கும் கூறியதில்லை. மாறாக,

''செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல்'' (759)

என்று இல்லறத்தார்க்கு மட்டுமே கூறினார். ஈட்டிய பொருளைத் தாமும் துய்த்துப் பிறர்க்கும் வழங்க வேண்டுமெனக் கருதியே ஈகையை இல்லறத்தார்க்கு வகுத்தார்.

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு'' (ஈகை - 231)

''வறியார்க்கொன்று ஈவதே ஈகை'' (ஈகை - 231)

''இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள'' (ஈகை - 223)

''ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்'' (ஈகை - 228)

என்று பலபட இல்லறத்தார்க்கு வலியுறுத்தினாரேயன்றித் துறவறத்தார்க்கு எங்கும் கூறவில்லை என்பதை உணர வேண்டும். துறவிகள் தவம் செய்வது அருட்செல்வத்திற்கே அன்றிப் பொருட் செல்வத்திற்காக அன்று. ஒப்புரவு, ஈகை, பொருள் செயல்வகை, நன்றியில் செல்வம் ஆகிய அதிகாரங்களை இல்லறத்தார்க்கு அவர் ஏன் கூறினார்? தவமுடையவர்கள் மட்டுமே செல்வர்களாக இருக்க முடியுமென்றால், மேற்கண்ட அதிகாரங்களை அவர் துறவற இயலில் அன்றோ கூறியிருக்க வேண்டும்? அப்படிக் கூறாமல் இல்லறவியலிலும், பொருட்பாலிலும், அவர் கூறியதற்குக் காரணம் என்ன? அவ்வதிகாரங்களில், கூறப்படும் கருத்துகள் இல்லறத்தார்க்கே

உரியது என்பதால் அன்றோ? 'இலர்' என்பதைப் பொருள் இல்லாதாரைக் கருதி வள்ளுவர் கூறியிருப்பாரேயன்றித் தவம் அதிகாரத்தில் கூறியிருக்க மாட்டார். இக் குறளுக்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், மணக்குடவரைப் பின்பற்றியே விளக்கியிருப்பது சற்றும் பொருந்துவதாக இல்லை.

"செல்வத்தை ஈட்டுதலும், அச் செல்வத்தைப் பிறர்க்கு வழங்குதலும் ஒரு நோன்பாகும். இந்த நோன்பைச் செய்இறவர்கள், நோற்பவர்கள் சிலரேயாக இருக்கிறார்கள். எனவே, இலர் பலராக இருக்கிறார்கள். இந்த நோன்பை நோற்பார் பலரானால் செல்வம் உடையரும் பலராவார்கள், இதுதான் நியாயமான உரை.

செல்வத்தை முயன்று ஈட்டிப் பலருக்கும் வழங்கும் நோன்பை நோற்பார் பலரானால் செல்வம் உடையாரும் பலராக இருப்பார்கள். அங்ஙனம் நோற்பார் சிலராயின் வறியவர் பலராவர் என்று தெளிவாகக் கூறினார். மேற்கண்ட உரை துறவறவியலில் வரும் 'தவம்' என்ற அதிகாரத்திற்குப் பொருந்துமோ என்ற ஐயப்பாடு சிலருக்குத் தோன்றலாம். பொருந்தும். முக்காலும் பொருந்தும் என்பதே நம்முடைய கருத்து. தவ ஒழுக்கத்தின் முதற்படி பொருட்பற்று நீங்குதலேயாம். அதனால் பொருந்தும். தவமுடையார்க்குப் பொருள் ஏது என்ற வினா எழலாம். தவமுடையார் தாமே நேரில் பொருள் ஈட்டாது போனாலும், அவர்தம் தவத்தினால் கவர்ச்சிக்கப்பட்டவர்கள் - நன்மைகளைப் பெற்றவர்கள் காணிக்கை தருவார்கள். அங்ஙனம், சாதாரண மக்களும் மன்னர்களும் கூடத் தந்துள்ளனர் என்பதை நமது நாட்டு வரலாறே பேசுகின்றது".

தவத்திரு குன்றக்குடியடிகள் - குறட்செல்வம் - பக்: 92-93 - 1969, கலைவாணி புத்தகாலயம் - சென்னை-17)

'இலர் பலராகிய காரணம்' எனுங் குறட்பாவில், இலர் பலரானதற்குக் காரணத்தை மட்டுமே வள்ளுவர் கூறுகிறார். தவமுடையவர்களே செல்வர்களாக இருந்தார்கள் என்று வாதத்திற்கு வைத்துக் கொண்டாலும் குன்றக்குடியடிகள் கருதுவதைப் போன்று, தம் பொருளைப் பிறர்க்கு வழங்க வேண்டிய வள்ளன்மையைத் துறவிகளாகிய செல்வர்கள் கடைப்பிடித்தார்கள் என்று வள்ளுவர் அக்குறளிலோ, வேறு குறள்களிலோ ஒரு சிறிதும் சுட்டிக் காட்டவில்லை. துறவிகள்



வழங்கும் பொருளால் (கொடையால்) மற்றவர்கள் செல்வர்களாகி விட முடியுமா? இது நடைமுறைக்கு ஏற்குமா? அடிகளார் தம் விருப்பத்திற்கேற்றவாறு குறளை மடக்கிப் பொருள் காண்பது சிறிதும் பொருந்துவதாக இல்லை. மற்றும், துறவிகள் நேரிடையாகப் பொருள் ஈட்டவில்லையென்றாலும், சாதாரண மக்களும், மன்னர்களும் தந்த காணிக்கையால், அவர்கள் பலர்க்குப் பொருளுதவி செய்திருக்கலாம் என அடிகளார் கருதுகிறார். மக்களும் மன்னர்களும் செல்வ மிகுதியால் அன்றோ (Excess wealth) துறவிகளுக்கு உதவி செய்திருக்க வேண்டும். அப்படியென்றால், அந்த மக்களும், மன்னர்களும் இல்லற வாழ்க்கையைக் கடைப்பிடித்தவர்கள் தாமே! மேற்கண்ட குறளில் துறவிகளைத்தான் வள்ளுவர் கூறியிருக்கிறார் எனப் பெரிதும் வலிந்து கூறும் அடிகளாரின் விளக்கத்திற்கு, அவர்தம் அந்த விளக்கமே முரணாகவும் மறுப்பாகவும் உள்ளதை நன்கு உணரலாம். பொருள் இல்லாதவர்கள் பலராக இருப்பதற்குக் காரணம் தவம் செய்பவர் சிலராக இருப்பதே ஆகும் என மணக்குடவர் முதல் அடிகளார் வரை கூறும் விளக்கத்தைத் திருக்குறளின் அகச்சான்றுகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதே சிறந்தது.

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்" —(இல்வாழ்க்கை-44)

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"
—(ஒப்புரவறிதல்-212)

"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது" —(ஈகை-227)

"இரவார்; இரப்பார்க்கொன்று ஈவர்: கரவாது
கைசெய்தூண் மாலை யவர் —(உழவு-1035)

பழிக்கு அஞ்சிப் பொருளைச் சேர்த்து, அப் பொருளைப் பிறர்க்கும் பகுத்துக் கொடுக்கும் வழக்கத்தை மேற்கொண்டால், இல்வாழ்க்கையில் ஒழுங்கு என்றும் குறைவதில்லையென்றும், தம் முயற்சியால் ஈட்டிய பொருளெல்லாம் தக்கவர்க்கு உதவி செய்வதற்கே ஆகும் என்றும், தாம் பெற்ற உணவைப் பலரோடும் பகுத்து உண்ணும் பழக்கம் உடையவனைப் பசி என்று கூறப்படும் தீயநோய் அணுகுதல்

இல்லையென்றும், கையால் தொழில் செய்து உண்ணும் இயல்புடைய உழைப்பாளர் பிறரிடம் சென்று இரக்க மாட்டார்; தம்மிடம் இரந்தவர்க்கு மறைக்காமல் பொருள் ஈவார் என்றும், அடுத்தடுத்து இல்லறத்தார்க்குக் கூறியவாறே யன்றித் துறவிகளுக்குக் கூறவில்லை.

"தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு" —(1107)

தலைவன் தலைவியைத் தழுவுகின்ற போது ஏற்படுகின்ற இன்பம், தம் இல்லத்திலிருந்து ஈட்டிய பொருளைப் பிறர்க்குப் பகுத்துக் கொடுக்கும்போது உண்டாகின்ற இன்பம் போன்றது எனது காமத்துப்பாலிலும் வள்ளுவர் வலியுறுத்துகிறார் எனில், பகுத்துண்ணும் அறம் இல்லறத் தார்க்கு எத்துணை இன்றியமையாதது என்பது இனிது புலனாக்குகிறதன்றோ! அதனாற்றான்,

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை" —(இல்வாழ்க்கை-42)

என்றார். இல்லறத்தார் வறியவர்கட்கும், ஆதரவு அற்ற அனாதைகட்கு மட்டுமே அல்லாமல், துறவிகளுக்கும் அவர்களே துணையாவர் என வள்ளுவர் வெளிப்படையாகக் கூறுகிறார் எனில், வறியவர்கள் பலராக இருப்பதற்குக் காரணம் தவம் செய்பவர் சிலரே என மணக்குடவர் முதல் அடிகளார் வரை தரும் விளக்கம் யாங்ஙனம் பொருந்தும்? துறவிகளுக்கு இல்வாழ்வார் உதவி செய்வது, தமிழகத்தில் பண்டுதொட்டு இன்றுவரை இருந்து வரும் ஒரு சமூகக் கடன் எனில் மிகையன்று,

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்துஎதிர் கோடலும் இழந்த என்னை"
—(சிலப்பதிகாரம்-கொலைகளக்காதை-71-73)

என்று கண்ணகி கூறுவதிலிருந்து, துறவிகளைப் பேணுவது இல்லறத்தார்க்கு எத்துணை முக்கியக் கடனாக இருந்திருக் கிறது என்பதை நன்கு அறியலாம். எல்லாப் பொருட் களையும் துறப்பதும் அவற்றுள்ளும் பொருட்பற்றைத் துறப்பதே துறவிகளுக்கு முதற் கடனாகும் என்பதை வள்ளுவர் பற்பல இடங்களில் வலியுறுத்துகிறார்.

(தொடரும்)

## தமிழிசை மரபு

இசைக் கலைச் செல்வர் வீ. ப. கா. சுந்தரம்,
தமிழிசை ஆய்வு முதுபேராசான்.

இது அகவல் பாவில் இயற்றப்பட்ட இசையிலக்கண நூல்; தொடர்ந்து செந்தமிழ்ச் செல்வியில் வெளிவரும். பின்னர் நூலாய் அருள் வள்ளல் நா. மகாலிங்கம் அவர்களின் துணை கொண்டு வெளியிடப்படும். நான் கழகம் வளர்த்த பிள்ளை. எனவே நன்றி கூறேன். படிப்பவர்கள் கருத்துக்களை எழுதுக. இது 44 இயல்களைக் கொண்ட நூல்; 2000 அடிக்கும் மேலே கொண்டுள்ளது முடிந்த நூல்.

வில்லின் நரம்புகளை வேடர்கள் தெறித்துச் சுரங்களைக் கண்டுபிடித்தனர். நரம்பிலே சுரங்கள் பிறந்தமையால் சுரங்கட்கு நரம்பு எனப் பெயரிட்டான்; ஆகுபெயர். 'காற்று என்னும் சிறுவன்' மூங்கில் துளையில் ஊதினான். சிறிது காற்று ஊதி ஒரு துளையில் அடிப்படைக் குரலை (ஆதார சட்சம்) எழுப்பினான்; காற்றை வலுவாய் அதே துளையில் ஊதி உச்சக் குரலை (தார சட்சம்) எழுப்பினான். காற்று எனும் சிறுவன் இரண்டு சுரங்களைக் கற்பித்தான்:

1. வேட்டுவர்கள் ஆயர்கள் கண்டுபிடிப்பு:

   இன்னிசை நரம்புகள் ஏழெனக் கண்டார்
   பன்னரும் வேடரும் ஆயரும் ஆய்ந்து

2. வில் நாண் ஒலிகள்:

   வேடர் குடும்பம் வேட்டைக்குச் சென்றது
   வில்நாண் தெறித்து வெற்றிகொண் டாடியது

3. இளகிய நாண்-குரல்; இறுகிய நாண்-இளி:

   மைந்தனின் வில் நாண் குரலாய் ஒலித்தது;
   தந்தையின் வில்நாண் இளியாய் ஒலித்தது;

4. இரண்டும் பொருந்துதல்:

   இவ்விரு நாண்கள் இணைந்து பொருந்தி
   ஒன்றனுள் ஒன்று ஒன்றித்து நின்றன.

5. **இளியுள் குரல் இரண்டறக் கலத்தல் :**

இளியுள் குரலே இணைந்து ஒலித்ததைக்
களிமகிழக் கொண்டு கற்றனர் கண்டு.

6. **காற்று கற்றுத் தந்தது :**

வண்டுசெய் துளைகள் மூங்கிலில் இருந்தன;
கண்டனன் காற்றெனும் சிறுவன் களித்து.

7. **சிறு காற்றால் அடிப்படை சட்சம்; பெருங் காற்றால் உயர் சட்சம் :**

சிறுகவே ஊதித் தாழ்குரல் காட்டினான்;
பெருக அதில் ஊதி உயர்குரல் காட்டினான்.

8. **ஒரே துளையில் இரு சுரம் :**

ஒருதுளை தன்னிலே இருகுரல் காட்டியே
ஒருமண் டிலமென உரைத்தனன் காற்றன்
மண்டிலம் = தாயி, (Octave)

9. **நரம்பிலே எழுந்த ஒலி - நரம்பு :**

வில்லின் நரம்புகள் இசை ஒலி எழுப்பவே
சொல்லினன் நரம்பென அவ்வொலிகளுக்கு

10. **விஒலும் குழலும் இசை ஆசிரியர்கள் :**

வில்லின் நரம்பும் குழலின் துளையும்
சொல்லித் தந்தன நல்லிசை ஒலிகளை

எழுதுக :

முனைவர் வீ. ப. கா. சுந்தரம்
தமிழிசை ஆய்வு முதுபேராசான்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி - 620 021

---

# திருக்கோவையே முதற்கோவை

முனைவர் கி. இராசா, தமிழியல்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

சங்க அகப்பொருளை முழுமையாகப் பேரின்ப விளக்கத்திற்குப் பயன்படுத்திய முதல் நூல் திருக்கோவையாகும். பாசத்தால் கட்டுண்ட உயிர்கட்குப் பதியின் பெருமையை உணர்த்துதல் இந் நூலின் பாடுபொருளாக அமைந்துள்ளது.[1] மாணிக்கவாசகர், இப்பக்திப் பொருளுக்கு அகப்பொருளால் ஆக்கம் தந்துள்ளார். சான்றாக, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனும் அகத்துறைக்கு, ''சிவசக்தியாக அருளே சிவத்தை உயிர் அறியாவண்ணம் மாயேயம் என்னும் மலமுமாகின்ற தன்மையைத் தெரிவித்தல்''[2] என்ற விளக்கத்தைத் திருக்கோவையார் தருகிறது. 'செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்' எனும் துறைக்கு, ''திரோதனசக்தி உயிர் சிவத்தோடு கலந்த தன்மையைப் பரா்சக்திக்குணர்த்தல்''[3] என்ற விளக்கத்தை இந்நூல் தருகிறது. இவ்வாறு தலைவனை உயிராகவும், தலைவியைச் சிவமாகவும், தோழியை அருளாகவும், செவிலித்தாயைத் திரோதன சக்தியாகவும், நற்றாயைப் பராசக்தியாகவும், திருக்கோவையாரில் மாணிக்கவாசகர் படைத்துக் காட்டியுள்ளார்.

கோவை இலக்கிய வரலாற்றில் திருக்கோவையாருக்குத் தலைமையிட உண்டு. கோவை இலக்கணங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய முழுமுதல் முறையான நூல் திருக்கோவையார் எனலாம். மானிடருக்குப் பாடப்படும் அகப்பொருளான கோவை, முதன்முதலாக இறைவனுக்குப் பாடப்பட்டது. இவ்வாறு திருக்கோவையார் தலைமை பெறுவதற்குப் பின்வரும் சூழல்கள் காரணமாய் இருந்திருத்தல் கூடும் :

அ. பாணிக்கவாசகர் காலத்தில் பாண்டியன் வரதுணனுக்கும், பல்லவன் தந்திவர்மனுக்கும் கி. பி. 806 முதல் 817 வரை பதினைந்து ஆண்டுகள் பல போர்கள் நடைபெற்றன. அனைத்திலும் பாண்டியனே வென்றான்; இதே காலத்தில் தந்திவர்மன்

வடக்கே இராட்டிர கூடர் படையெடுப்பாலும் தவித்தான்.[4] இதனால் மாணிக்கவாசகர் காலத்தில் பாண்டிய நாடு புகழோங்க, பல்லவநாடு சீர் குன்றியிருந்தது. புகழுச்சியில் இருந்த பாண்டிய நாடு புதிய இலக்கிய வகைகள் தோன்ற நிலைக்களமாயிற்று.

ஆ. மாணிக்கவாசகருக்கு முன்பிருந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் அகப்பொருள் தோய்ந்த இறைப் பாசுரங்களைப் பாடிச் சமய உணர்வினைப் பரப்பினர். இத்தகு முன்னோர் நெறியில் மனங்கொண்ட மாணிக்கவாசகர், சங்க இலக்கிய அகப்பொருள் மரபின் வாயிலாகச் சமயத்தைப் பரப்புவதற்குக் கோவை எனும் புதிய இலக்கிய வகையை யாத்தார்.

இ. கோவை பாடுதற்கு முன்பே அகப்பொருள் மரபுகளை மாணிக்கவாசகர் திருவாசகத்தின்கண் பெய்து பாடினார்.[5] இவ்வாறு அகப்பொருள் மரபில் தோய்ந்திருந்த மாணிக்கவாசகர், அவற்றை ஒருங்கிணைந்துக் கோவையாகப் பாடவேண்டும் என்று உளங் கொண்டாராகலாம்.

ஈ. மாணிக்கவாசகர்தம் பக்தியின் புறவுணர்வு திருவெம்பாவையாக வடிவம் பெற்றது; இருப்பினும், அவர்தம் அகவுணர்வு இதனால் நிறைவுறவில்லை எனலாம். குருந்தமரத்தின் கீழ் குருவாக வந்தமர்ந்தும், பல்வேறு திருவிளையாடல்கள் புரிந்தும் இறைவன் ஆட்டுவித்த மாணிக்கவாசகர் தம் அகவுணர்வு, திருக்கோவையார் பாடிய பின்னர் நிலை பெற்றது.

உ. திருக்கோவையாருக்கு முன்னர்த் தோன்றிய பாண்டிக்கோவை, தொகை நூலாகவும், கருதப்படுகிறது. பாண்டிக்கோவை தொகை நூலாகத் தோற்றமளித்தமையால், முழுமையான, முறையான முதல் கோவை நூலாகத் திருக்கோவையெனும் புதிய நூலினைப் படைக்க மாணிக்கவாசகர் மனங் கருதியிருத்தல் கூடும்.



**திருக்கோவையாரும் களவியற்காரிகையும் :**

யாப்பருங்கலத்துக்கு விளக்கமாக யாப்பருங்கலக்காரிகை அமைந்தது போன்று இறையனார் களவியலுக்கு விளக்கமாகக் களவியற்காரிகை அமைந்துள்ளது. இக்களவியற் காரிகையில் பாண்டிக்கோவைப் பாடல்களும், திருக்கோவையார் பாடல்களும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் திருக்கோவையார் பாடல்கள் மட்டுமே தொடர்ச்சியாகக் காட்டப்பெற்றுள்ளன. பாண்டிக் கோவைப் பாடல்களில் இத்தகு தொடர்ச்சி இல்லை.[6] சான்றாக, இடந்தலைப்பாடு எனும்பாங்கனாலாய கட்டத்திற்குரிய பதினெண் துறைகளுக்கும் மேற்கோட் செய்யுட்களைக் காட்டுமிடத்துத் திருக்கோவையாரில் 20-24, 28-30, 32-34, 36, 38, 41, 43, 45, 46, 48 ஆகிய பாடல்கள் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டுள்ளன. பாண்டிக்கோவையில் 24, 27, 30, 34, 33, 35, 36, 38, 39, 40, 42, 43, 44, 39, 51, 58, 49, 53, 54, 20 ஆகிய பாடல்கள் முன்னும் பின்னும் மாறிக் காட்டப்பட்டுள்ளன. இச்சான்றும் முழுமையான, முறையான முதல் கோவை நூலாகத் திருக்கோவையார் திகழ்வதைச் சுட்டவல்லது.

**திருக்கோவையும், புறப்பொருள் வெண்பாமாலையும் :**

திருக்கோவைக்கும், பு. வெ. மாலைக்கும் அமைப்பு முறையில் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. திருக்கோவை, நானூறு அகத்துறைகளால் (கிளவிகளால்) ஆனது. இவை இருபத்தைந்து தொகுதிகளாக அமைந்துள்ளன. அகத்துறை ஒவ்வொன்றும் கொளுவினால் விளக்கப்பட்டுள்ளது; கொளு ஒவ்வொன்றும் சான்றுப் பாடலால் விரித்துரைக்கப்பட்டுள்ளது; மிகைக் கொளுக்களும் மிகைச் சான்றுப் பாடல்களும் பெற்ற துறைகள் திருக்கோவையில் உள்ளன. திருக்கோவையின் இவ்வமைப்பு கோவை இலக்கிய வகைக்கு இலக்கணம் அமைக்கத் துணையாக இருந்தது. இவ்வகையில் கோவை இலக்கியமாகவும், இலக்கணமாகவும் திருக்கோவை திகழ்கிறது.

புறத்திணை இலக்கணம் நுவலும் பு. வெ. மாலையில் முந்நூற்று முப்பத்திரண்டு புறத்துறைகள் அமைந்துள்ளன. இவை பதின்மூன்று நூற்பாக்களில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. துறைகள், கொளுச் செய்யுளாலும், கொளுச் செய்யுட்கள், சான்றுப் பாடல்களாலும் விளக்கம் பெற்றுள்ளன. திருக்

கோவை போன்று மிகைக் கொளுக்களும், மிகைச்சான்றுப் பாடல்களும் பெற்ற துறைகள் பு. வெ. மாலையிலும் உள்ளன. பு. வெ. மாலையின் காலம் கி. பி. 9 ஆம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது. திருக்கோவை ஆசிரியரான மாணிக்க வாசகரும் இக்காலத்தவரே ஆவர். சமகாலத்தில் தோன்றிய திருக்கோவையும், பு. வெ. மாலையும் முறையே அகப் பொருள், புறப்பொருள் அமைப்பு முறையில் ஒன்றை யொன்று சார்ந்து வளர்ந்திருத்தல் வேண்டும் எனக் கருத இடமுண்டு.

**கோவை இலக்கணத்திற்குத் தோற்றுவாய்:**

'களவு, கற்பு' என்ற ஐந்திணைப் பொருத்தத்துடனும், காட்சித் தொடர்புடனும், திணை, கைகோள், கூற்று, பாட்டிற்குரிய பன்னிரு உறுப்புக்களும் அமைய, நானூறு கலித்துறைச் செய்யுட்களால் பாடப்பெறுவது கோவை இலக்கியம்[7] எனப் பிற்காலப் பாட்டியல் நூல்கள் இலக்கணம் வகுத்துள்ளன. இவ்வாறு இலக்கணம் வகுப்பதற்குத் திருக் கோவையார் தோற்றுவாயாகத் திகழ்ந்துள்ளது.

திருக்கோவையாரில் துறைக்கு ஒரு பாடல் வீதம் நானூறு பாடல்கள் அமைந்துள. களவுப் பகுதியில் இரு நூற்று அறுபத்தைந்து துறைகளும், கற்புப் பகுதியில் நூற்று முப்பத்தைந்து துறைகளும் இயன்றுள்ளன. இதனைப் பின்வருமாறு காட்டலாம்:

| | | | | |
|---|---|---|---|---|
| களவு: | குறிஞ்சி | | | 265 |
| கற்பு: | முல்லை பிரிவு (வினை) | பாலை பிரிவு (பொருள்) | மருதம் பிரிவு (பரத்தை) | 135 |
| | | | | 400 |

பிற்காலக் கோவை நூல்களில் களவுத் துறைகளின் ஆட்சி மேலோங்கியமைக்குத் திருக்கோவையார் சான்றாக அமைந்துள்ளது. திருக்கோவையாரில் எழுபத்தைந்து விழுக்காடு (265/400) துறைகள், களவுப் பொருண்மையில் அமைந்துள்ளன. மொத்தக் கிளவித்தொகைகள் இருபத்தைந் தில் பதினெண் கிளவித்தொகைகள் களவிற்குரிய குறிஞ்சித் திணையில் அமைந்துள்ளன[8] பிற முல்லையில் ஒன்றும்,[9]



பாலையில் ஐந்தும்,[10] மருதத்தில் ஒன்றுமாக,[11], அமைந் துள்ளன.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்[12] என்பது இலக்கிய வரலாற்றில் காணப்படும் பொது நெறி யாகும். முன்னர் நிலவிய பல இலக்கிய இலக்கணங்களைக் கண்டுணர்ந்து தொல்காப்பிய இலக்கணம் செய்யப்பட்டது. தொல்காப்பிய அகப்பொருள் இலக்கணத்தை மனங்கொண்டு இறையனார் களவியல் உருவாயிற்று. இறையனார் களவியலுக்குக் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் உரை வளர்ந்த போது பாண்டிக்கோவை அதற்கு இலக்கியமாக எடுத்துக் காட்டப்பெற்றது. இதற்குப் பின்னர்த் தோன்றிய அகப் பொருள் இலக்கண வளர்ச்சியை எடுத்துக்காட்டும் வண்ணம் கொளுக்களையும், கொளுவிளக்கச் செய்யுட்களையும் படைத்துக் கோவை இலக்கிய வகையின் முழு முதல் இலக்கிய மாகவும் இலக்கணமாகவும் திருக்கோவையார் ஒருங்கே உருவாயிற்று.

**அடிக்குறிப்புக்கள்:**

1. சோமசுந்தரனார், பொ. வே., (விளக்கவுரை), திருக்கோவையார் பழைய உரையும், புதிய விளக்கமும், சை. சி. நூ. கழகம், 1970.
2. மேலது, ப. 369.
3. மேலது, ப. 376.
4. Mahalingam, T. V. Kanchipuram in Early South Indian History, Asia Publisbihg House, New York, 1969, P. 187.
5. அருணாசலம், டாக்டர் ப, பக்தி இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973, ப. 257.
6. துரைசாமி, வே, (பதிப்.) பாண்டிக்கோவை, ஸ்டார் பிரசுரம், சென்னை 1957.
7. பன்னிரு பாட்டியல்: 137, பிரபந்த மரபியல்: 7, சுவாமிநாதம்: 167.
8. இயற்கைப் புணர்ச்சி, பாங்கற்கூட்டம், இடந் தலைப்பாடு, மதியுடம் படுத்தல், இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல், முன்னுற உணர்தல்,

குறையுற உணர்தல், நாணநாட்டம், நடுங்க நாட்டம், மடற்றிறம், குறை நயப்பித்தல், சேட்படை, பகற்குறி, இரவுக்குறி, ஒருவழித் தணத்தல், உடன்போக்கு, வரைவு முடுக்கம், வரைபொருட் பிரிதல்.

9. மணஞ்சிறப்புரைத்தல்;

10. ஓதற்பிரிவு, காவற்பிரிவு, பகைதணி வினைப்பிரிவு, வேந்தர்க் குற்றுழிப்பிரிவு, பொருள்வயிற் பிரிவு.

11. பரத்தையிற் பிரிவு;

12. இளங்குமரன், இரா., (பதிப்.) களவியற்காரிகை, சை. சி. நூ. கழகம், சென்னை, 1973, ப. 10.

———


மறுபதிப்புகள்

**பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்**

—மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் 40 00

தமிழினம், தமிழ்நாடு, அதன் நாகரிகம் ஆகியவற்றில் தோய்ந்த ஈடுபாடு தமிழ் மக்கள் அனைவரும் அறிந்த ஒன்றாகும். பிறரின் சூழ்ச்சியாலும், நம்மவரின் பெருந்தன்மை என்ற வடிவில் அமைந்த பேதைமையாலும் மறைக்கப்பட்ட உண்மைகளை விளக்கும் இந் நூலைப் படித்துத் தமிழ் மக்கள் புத்துணர்ச்சி அடைவார்கள் என்பது உறுதி.

**சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்**

—மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் 25 00

சொல்லாராய்ச்சி ஒரு விஞ்ஞான இயலாக வளர்ந்து பல புதிய கோளங்களை நம்மிடையே உருவாக்கி வருகிறது. ஒரு கால்டுவெல் அன்று, பல கால்டு வெல்கள் நம்மிடையே அறிமுகமாகியுள்ளனர். வேர்ச் சொற்கள் பற்றிய ஆய்வும் மொழியியல் துறையில் புதியதோர் ஆய்வு; தமிழின் தனித் தன்மையும், தமிழ்ச் சொல்வளமும் ஆராய விரும்புவோர்க்குப் புதிய பல உண்மைகளை இந்நூல் எடுத்துக் காட்டு கிறது.


## சங்க நூல்களில் சங்குகள்

பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு)

(முன் இதழ் ௧௧௮ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்காலத்தில் சங்கு வளையல்களைப் பயன் படுத்துவதில்லை. ஆனால் சங்க காலத்தில் சங்கு வளையல் களையே மகளிர் அணிந்தனர் என்பது தெரிகின்றது. அதற்குத் தூய வெண்மையான சங்குகள் பயன்பட்டன. 'அவ்வளை வெரிநினரக்கீர்த்தன்ன' என்று வரும் நற்றிணை (25) வரிகளில் வெள்ளை நிறமான சங்கின் வெளிப்புறத்தில் அரக்கை ஈர்த்ததுபோல என்று கூறப்பட்டுள்ளது. பரதவர்கள் வளையில் அதாவது சங்கின் விளையும் முத்தை விற்றனர் என்று கூறப் பட்டுள்ளது. சங்குகளிலும் முத்து தோன்றுவதுண்டு. ஏர்னெஸ்டு எமிங்வே என்ற புகழ் பெற்ற ஆங்கில போதின ஆசிரியர் பகாமாஸ் (Bahamas) கடலில் கிடைத்த சங்கு முத்துகள் (Conch pearls) அரசுடைமையாகப்பட்டு இங்கிலாந்து அரசிக்கு அனுப்பப்பட்டதைக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்த முத்து சிப்பியில் கிடைக்கும் முத்தைவிட மிகவும் தாழ்ந்தது. ஆனால் சங்குகளில் முத்து உண்டாவது மிக அரிதான கலையால் சங்கு முத்து அக்காலத்தில் உயர்ந்ததாகக் கருதப்பட்டது. சிலப்பதிகாரத்தில் கண்ணகியைக் கோவலன் 'வலம்புரி முத்தே' என்று பாடிப் போற்றுவது கூறப்பட்டுள்ளது. வலம்புரியும் ஒருவகைச் சங்காகும். ஆனால் மிகமிக அரிதில் கிடைப்பது. அவ்வாறு மிகமிக அரிதாகக் கிடைக்கும் சங்கில் அதைவிட மிகமிக அரிதாகத்தான் முத்து தோன்றும். ஆதலின் வலம்புரிச் சங்கின் முத்து எல்லா முத்துக்களைக் காட்டிலும் சிறந்த முத்தாகச் சிலப்பதிகாரத்தில் கருதப்பட்டது. ஆனால் இந்த முத்தும் சிப்பி முத்தைப் பார்க்கில் தாழ்ந்ததேயாகும்.

2. பணிலம்

''பறைபடப் பணிலமார்ப்ப விறைகொள்பு''

—குறுந்தொகை 15

''இருதலைப் பணில மார்ப்பச் சினஞ்சிறந்து

—மதுரைக் காஞ்சிவரி 280

''மூந்தை யாமஞ் சென்ற பின்றை
பணிலங் கலியவிந் தடங்கக் காழ்சாய்த்து

—மதுரைக் காஞ்சிவரி 621

பணிலம் என்பது இக்காலத்தில் கோயில்களில் ஊதும் பெரிய சங்குகளாகும்; யானை வருவதை அறிவிக்க இருதலையிலும் பணிலம் ஊதப்பட்டதை மதுரைக் காஞ்சி கூறியுள்ளது. இரவில் யாமத்தை அறிவிக்கப் பணிலத்தை ஊதினது மதுரைக் காஞ்சி கூறியுள்ளது. போர்க்களத்தில் சங்கு முழங்கியதைக் குறுந்தொகை கூறியுள்ளது. பணிலம் சங்கினின்று வேறுபட்டதன்று. ஒலியெழுப்புவதற்காகப் பயன்பட்ட பெரிய சங்கே பணிலமாகும்.

## 3. வலம்புரி

வலம்புரிச்சங்கு சங்கு வகையில் ஒன்றாகும். சங்குகளில் இடப்புரி, வலம்புரி என்று இருவகைகள் உண்டு. இடம்புரிச் சங்கு எளிதில் கிடைப்பதாகும். ஆனால் வலம்புரிச் சங்கு அரிதாகவே கிடைக்கும்.

"இலங்கு நீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்"
—பெரும்பாணாற்றுப்படை வரிகள் 34-35

"வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து"
—நெடுநல்வாடை வரி 142

"விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும்" —நற்றிணை 172

"வலம்புரி யுழுத வார்மண லடைகரை
இலங்குகதிர் முத்த மிருள்கெட விமைக்கும்"
—ஐங்குறுநூறு 198

"அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து
—அகம் 201

"வயங்குகதிர் வயிரமொடு வலம்புரி யார்ப்ப
—பதிற்றுப்பத்து 60-6

"திரங்குகுரன் முரசமொடு வலம்புரி யார்ப்ப"
—புறம் 397

"துணைபுணர்த் தெழுதருந் தூநிற வலம்புரி"
—கலித்தொகை 188

---

# தமிழ் ஏன் பிறமொழிகளாய் மாறியது?

சாத்தூர் சேகரன்

## முன்னுரை :

உலகின் மூத்த மொழி தமிழ் என்ற உண்மை பலருக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் உலகில் தமிழ்மொழி மட்டுமே உள்ளது என்ற உண்மையும் இன்றுள்ள ஏறத்தாழ இரண்டாயிரத்து எழுநூறு மொழிகள் யாவும் தமிழின் கிளை மொழிகள் என்ற உண்மையும் தெரிந்திருக்காது. இந்த உண்மைகளை யான் உலகிற்கு அறிவித்தபோது பெரும் பரபரப்பு அறிஞர்கள் இடையே ஏற்பட்டது.

டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களும் யானும் இயற்றிய குமரிக்கண்டக் கோட்பாடு, இன்று விடுகதைகளாகவும், விடுபடாத புதிர்களாகவும் உள்ள மொழித்துறை, மொழியியல் துறை, மானுட இயல், உலகப் பண்பாட்டு ஒற்றுமை ஆகிய பல துறைகளிலும் உள்ள குழப்பங்களுக்கு விடையளிக்கிறது. உலகில் உள்ள மக்கள் யாவரும் "யாதும் ஊரே யாவரும் தமிழர்!" ஆவர்.

இந்த நிலையில் தமிழ் ஏன் பிறமொழிகளாய் மாறியது? என்ற வினாவிற்கு விடைகாண முற்பட்டால், பல புதுமைகள், சில அருமைகள், சில விதிமுறைகள் ஆகியவற்றைக் காண நேரிடலாம்.

## தமிழ் பிற மொழிகளாய் மாறிய காரணங்கள் :

1. சித்திர எழுத்துக் காலத்தில் சீனர், எகிப்தியர், பிரிந்தனர். இன்று சீனர் மட்டும் சித்திர எழுத்தை வைத்திருக்க, ஜப்பானியர் கடல்கடந்து சென்ற தமிழர் உதவியால் அரைகுறை அட்சர எழுத்து முறையைக் கையாள, கொரியரோ ஓரளவு தமிழ் வட்டெழுத்து முறையைக் கையாளுகின்றனர்.

ஹெமிட்டிக், செமிட்டிக் மக்கள்—பாலைவனப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர்: ஓலை—எழுத்தாணி இல்லாமையாலும், ஓலையில் எழுதியவற்றைக் காத்திட இயலாததாலும் களிமண் ஏட்டில்—இல்லை, ஓட்டில் எழுதினர். பின் கட

வைத்தனர். களிமண்ணில் எழுத வல இடமுறையே அவர்களுக்கு எளிதாக இருந்தமையால் வல இட எழுத்து முறையைக் கையாண்டனர். இதனால் எழுத்துக்களில் சில பிறண்டு அமைந்தன, சொற்கள் பிறண்டு மாறின; இலக்கணமும் முன்பின் ஒட்டாக எழுந்தது.

(வ் + ஆ) வா—>ஆவ், ஆ, யா என்றெல்லாம் மாறியது.

மாம்பழம், மா ஆகக் குறுகி 'ஆம்' என்றாயிற்று.

(படி, பக்தி, பாராயணம்) ஓது—>துவா ஆயிற்று.

(தண்ணீர்) அம்—>'ம' ஆகி மயி, மொயி ஆயிற்று.

இப்படி உலக மொழிகளில் எல்லாம் 5-10% சொற்கள் மாறுபட்டன. ஆகவே தமிழை மட்டுமே பேசி வந்த உலக மக்களின் சொற்களுக்கு 5-10% மாறுதல் உண்டானது.

2. சிந்துவெளி கருத்து எழுத்துக்கள் சுமேரியராலும் பினிசியராலும் மேற்கு ஆசியா, வடகிழக்கு, வடக்கு ஆப்ரிக்கா மற்றும் தென் ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு ஆங்காங்கு திருத்தம் செய்யப்பட்டன. எனவே எழுத்துக்கள் பல வடிவம் கொள்ளத் தலைப்பட்டன. எழுத்துக்களின் அமைப்பிலும் உச்சரிப்பிலும் சிறு சிறு வேறுபாடுகள் உண்டாயின.

8. உயிர் எழுத்துக்கள் தனியாகவும் மெய் எழுத்துக்கள் தனியாகவும் உள்ள தமிழ் அகர வரிசை முறையைச் சில மொழிகள் கையாளுகின்றன. வேறு சில மொழிகளோ மெய்யெழுத்துக்களுடன் அ, இ, உ போன்ற அடிப்படை உயிர்களை மட்டும் சேர்த்துக் கொண்டு அகர வரிசையை ஓர் அவியல் கூட்டமாக அமைக்கின்றன.

4. முன் ஒட்டு நடு ஒட்டு ஆகியனவற்றைத் தமிழ்ச் சொற்களுடன் சேர்த்தனர்.

முன் ஒட்டு:

ம் + அம்மா—>மம்மா, மம்மி, ஆங்கிலம்

ப் + அப்பா—>பப்பா,)
பாப்) ஆங்கிலம்
போப்)

ஜ் + ஊண் (உணவு)—>ஜோண்—>ஜோவண்: மராத்தி

(சண்டை) போர்—>ஹபோரு: ஹங்கேரி மொழி



பின் ஒட்டு:

அரை (பாதி, ½) அர்த்த)
ஆதா) : இந்திய மொழிகள்
அவா (ஆசை) ஆவாக் : ஹீப்ருமொழி
(பேராசை) அவெரைஸ் : ஆங்கிலம்

நடு ஒட்டு:

வாய் + கு—>வாக்கு : இந்திய மொழிகள்
வாய் + இயம்—>வாத்தியம் : இந்திய மொழிகள்
செடி—>செட்டு : தெலுங்கு

5. தமிழ்ச் சொற்களை, உலகமொழிகள் யாவும் சிலபோது குறுக்குகின்றன. அவை முன்குறுக்கம், பின் குறுக்கம், நடுக்குறுக்கம் என்று அமைகின்றன. இதனால் தமிழ்ச் சொற்கள் கிளைமொழிகளில் மாறித் தெரிகின்றன.

முன் குறுக்கம்:

நரம்பைக் கட்டுப்படுத்தும் திறன் மனிதனுக்கு இருந்தமையால் மனிதனை 'நரன்' என்றனர் நம் முன்னோர். இதனைச் சீன மொழி 'ரன்' என முதல் எழுத்தை விட்டு விட்டுக் கூறுகிறது.

(மனிதன்) நரன்—>ரன் (மனிதன்) : சீனமொழி
(தாய், பெண்) அன்னை னை/நொய் : ஹங்கேரி மொழி
அம்மா—>மா : வடஇந்திய மொழிகள்
அப்பா—>பா : வபஇந்திய மொழிகள்

பின்குறுக்கம்:

மாங்காய்—>மாங்க : சீன மொழி
(மலர்) மாலை—>மாலா : இந்திய மொழிகள்
(இரவு) இராத்திரி—>ராத் : வடஇந்திய மொழிகள்
குரங்கு—> : குர கெர : மலேசிய மொழிகள்

நடுக்குறுக்கம்:

அப்பா—>அபா : அரபி மொழி

6. தமிழ்ச் சொற்களைச் சற்று மாற்றம் செய்கின்றன, எல்லாக் கிளை மொழிகளிலும். அவை முன்மாற்றம், பின் மாற்றம், நடுமாற்றம் என்று அமைகின்றன.

**முன்மாற்றம் :**

அம்மா—>உம்மா—>உம்ம : அரபு மொழி
முத்து—>மோத்த : வடஇந்திய மொழிகள்
ஓரை (நேரம்)—>ஹோரா : கிரேக்கம்
ஓரி (தலைமயிர்)—>ஹோரி : கிரேக்கம்
ஹேர : ஆங்கிலம்

**பின்மாற்றம் :**

உளுவை (நரி)—>உல்ப் (நரி) : ஆங்கிலம்
(வேண்டும்) விழை—>வில் : ஆங்கிலம்
(விருப்பம்) இச்சை—>இச்சா : இந்திய மொழிகள்

**நடுமாற்றம் :**

(தந்தை) அத்தன்—>அச்சன்—அச்ச) : வடஇந்திய
அஜ்ஜ) மொழிகள்

சில வடஇந்திய மொழிகள் அஜ்ஜ என்று தாத்தாவையும் அழைக்கின்றன.

7. இன எழுத்துக்களைப்போட்டுத் தமிழ்ச் சொற்களை மாற்றுகின்றன கிளை மொழிகள்.

விழி—>(ழ=ட) வடி : இலத்தீன்
(ழ=ய) வியி வியூ : ஆங்கிலம்
(ழ=ச) விசன்—>விஷன் (காட்சி) : ஆங்கிலம்
வா=பா : கன்னடம்
அம்மா—>அம்பா : சமஸ்கிருதம்

**ற=ர :**

மன்+திறம்—>மந்திரம்)
மந்த்ர) : இந்திய மொழிகள்
மன்+திறம்+இ—>மந்திரி
மந்த்ரி : இந்திய மொழிகள்
(வீறு=) விற—>வீர : இந்திய மொழிகள்
வ=ஹ ஹீர (HERO) : இலத்தீன் ஆங்கிலம்
(திறன்/திறம்)—>தீற—>தீர : இந்திய மொழிகள்
ய=க (நட்பு) நேய—>ஸ்+நேய—>ஸ்நேக : இந்திய மொழிகள்

(தொடரும்)

# செய்திகள்

## தமிழ் மாருதம் கட்டுரைப் போட்டி
## பரிசு ரூ. 2,500!

'தமிழ் மாருதம்', கட்டுரைப் போட்டி ஒன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளது. இது பற்றிய விவரங்கள் :

கட்டுரைத் தலைப்பு :

**"பெரியபுராண அடியார் வாழ்வில் இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் - ஓர் ஆய்வு"**

கட்டுரை, முழு நீளத்தாளில், கையெழுத்திலோ, தட்டச்சிலோ அமையலாம். எழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும். கட்டுரை 100 (நூறு) பக்கங்கட்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். கட்டுரையாளர், தம் பெயர் முகவரியைக் கட்டுரையில் எழுதுதல் கூடாது! இதற்கெனத் தனிப் 'படிவம்' அச்சடிக்கப்பட்டுள்ளது. ரூ. 2/ (இரண்டு) அஞ்சல்தலை (stamp) அனுப்பி, இப் படிவத்தைப் பெற்று, நிறைவு செய்து, கட்டுரை முகப்பில் வைத்து இணைத்து அனுப்ப வேண்டும்.

பரிசு விவரம்: முதற் பரிசு ரூ. 1,000, இரண்டாம் பரிசு ரூ. 500 ஐந்து சிறப்புப் பரிசுகள் ரூ. 200 வீதம்.

கட்டுரை வந்துசேர வேண்டிய கடைசி நாள் : 30-1-1993.

கட்டுரை அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'தமிழ் மாருதம்', அ. பெ. எண்: 155,
7, சூடன் சாமியார் சந்து, மதுரை-625 001 (தமிழ்நாடு)

## படிக்கத் தவறாதீர்!

நம் காலத்து வாழும் வள்ளுவர் 94 வயது முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் வாழ்க்கை வரலாறு "முகம்" டிசம்பர் '92 இதழில் ஆரம்பமாகிறது, மாமணியின் எழுத்தோவியத்தில்,

ஆண்டுக் கட்டணம் ரூ. 20/- (M. O.)

"முகம்" (மாத இதழ்)
கே. கே. நகர், சென்னை-600 078.

# மதிப்புரை

## தமிழ் இலக்கியச் சமூகவியல்

**[ஆசிரியர்: டாக்டர். க. ப. அறவாணன், வெளியீடு: தமிழ்க் கோட்டம், 91, இரண்டாம் தெரு, மோகன் நகர், புதுச்சேரி - 605 005. பக். 328, விலை: ரூ. 60-00.]**

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்பர். ஓர் இலக்கியத்தைப் படித்து இன்புற, துய்க்க அது எழுந்த காலத்தின் சூழலை அறிந்துகொள்ள உதவும். தமிழ் இலக்கியத்தைச் சமுதாயச் சூழல் பின்னணியில் இதுவரை யாரும் ஆராய்ந்து எழுத முற்படாத நிலையில் புதுப்புதுத் துறைகளில் சிந்தித்து ஆயும் வல்லுநரான டாக்டர். க. ப. அறவாணன் இந் நூலை எழுத முற்பட்டமைக்காகப் பாராட்ட வேண்டும்.

பொதுவாகக் கால நிலையை ஒட்டி, சூழ்நிலைக்கேற்ற வகையில் எல்லோரையும் போலவே எழுதப்பெறும் நூல்கள் சிறப்படைவதில்லை. மன்னர்களைப் போற்றிக்கொண்டிருந்த காலத்தில் எளிய வாணிகன் ஒருவனின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு எழுந்த சிலப்பதிகாரம், மன்னன் விரும்பும் இன்பியல் காப்பியங்கள் எழுந்த சூழலில் அடியார்களைப்பற்றி எழுந்த பெரியபுராணம், சிற்றிலக்கியங்களும் சிறுதெய்வ நூல்களும் பாடப்பட்டுவந்த காலத்தில் சமுதாய, நாட்டு விடுதலைக்காகப் பாடிய பாரதி பாடல்கள் போன்றவை சமுதாயப் பின்னணியைக் கொண்டதாயினும் அவ்வக்கால மக்களுக்கு எதைக் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் எழுந்ததால் அவை இன்று சிறந்த இலக்கியங்களாகச் சிறந்து நிற்கின்றன. இருப்பினும் இவை எழுந்த காலத்தின் சமூகப் பின்னணியைப் பலரும் அறிந்துகொள்ள வேண்டுமென்று எழுதப்பட்டதே இந் நூல்.

இந் நூல் தொல்காப்பியம், சங்க இலக்கியம், அற இலக்கியம், காப்பியங்கள், பக்தி இலக்கியம், பாரதி பாடல், பாரதிதாசன் பாடல், புத்திலக்கியம் என்று எண்வகைத் தலைப்புகளில் அந்தந்த இலக்கியங்கள் தோன்றிய சமூகவியல் சூழ்நிலைகளை மிகத் திறம்படக் காட்டுகின்றது. இலக்கிய வகைகள், இலக்கிய வரலாறு, சமூகவியல் வரலாறு, நாட்டு வரலாறு போன்ற பல்துறை அறிவு கொண்டு நூலாசிரியர் இதனைச் சிறப்பாகப் படைத்துள்ளார்.



தொல்காப்பியத்தைப் பொறுத்தமட்டில் அக்காலத்துக் கற்றறிந்தோர் வழக்குகளுக்குச் சிறப்பிடம் தந்து பொது மக்கள் வழக்கை ஏற்காத நிலையைச் சுட்டிக் காட்டுகிறார். பொருளதிகாரமும் மரபியலினும் பொதுமக்கள் மரபையொட்டி இலக்கணம் படைக்கப்பட்டிருக்கிறது.

சங்க இலக்கியங்கள் 700 கால இடைவெளியில் வாழ்ந்த தமிழர்களின் தமிழ்ச் சமுதாய நிறுவனங்களின் சாயல்களைப் பெற்றிருந்தமையைக் குடும்பம், அரசு, சடங்கு, ஈகை போன்ற தனித்தலைப்புகளின் வாயிலாகச் சுட்டிக் காட்டுகிறார்.

சமணர்தம் வருகையால் தமிழர்களிடையே ஏற்பட்ட சமுதாய மாற்றங்களை அற இலக்கியங்கள் சுட்டிக் காட்டுவதை நூலாசிரியர் நன்கு விளக்குகின்றார்.

துண்டுக் கவிதைகளே பெருகிவந்த சூழலில் காப்பியங்கள் தோன்றியதற்குக் காரணம் சமயங்களுக்கிடையே நடந்த போட்டிகளே என்பதை விளக்கி இவற்றில் விலகி நிற்பது சிலப்பதிகாரம் மட்டுமே என்பது நூலாசிரியரின் கருத்து.

அயல்மொழி, சமய, தத்துவ, அரசியல் ஆதிக்கத்தின் தீவிரம் ஆகியவற்றால் தமிழ்ப்பற்று, சைவசமயப்பற்று போன்றவை மிக்குயர்ந்து சாத்திரங்களும் திருப்புகழ் போன்ற பத்திப்பாடல்களும் எழக் காரணமாயிருந்தன.

அன்னியர் ஆட்சி ஆதிக்கமும் அவர்கள் மக்களை அடிமைப்படுத்தியதுமே பாரதியின் விடுதலை ஆவேசப் பாடல்கள் தோன்றக் காரணமாயிருந்தன.

சாதி, சமயம் போன்றவை மக்களிடையே மூடநம்பிக்கைகளை அளவுக்கு அதிகமாக வளர்த்துவிட்டதன் காரணமாக மக்கள் சோம்பிக் கிடந்த சூழ்நிலையே பாவேந்தர் புரட்சிக் கவிஞராக மாறக் காரணமாயிருந்தது என்பதை நூலாசிரியர் தெளிவுற எடுத்துரைக்கிறார்.

மொத்தத்தில் தமிழ் இலக்கியங்கள் தோன்றக் காரணமாயிருந்த சமுதாயச் சூழலை வரலாற்று அடிப்படையில் முதன் முறையாக ஆய்ந்து இவ்வரிய நூலை உருவாக்கியுள்ள நூலாசிரியர் பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியவர். ஆசிரியரின் கடுமையான உழைப்பை நூல் முழுவதும் காண முடிகிறது.

நூல் நல்ல முறையில் அச்சாகி உள்ளது. கண்ணைக் கவரும் புதியவகை மேலட்டை அழகுக்கு அழகூட்டுகிறது.

031m211,n22



## "செந்தமிழ்ச் செல்வி"

| ஆண்டுக் கையொப்பம் | | வாழ்நாள் கையொப்பம் | |
|---|---|---|---|
| உள்நாடு | ரூ. 25-00 | உள்நாடு | ரூ. 250-00 |
| வெளிநாடு | ரூ. 125-00 | வெளிநாடு | ரூ. 750-00 |

### மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

| | |
|---|---|
| உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்) | 10 00 |
| திரு. வி. குமாரசாமி அவர்கள், ரியூனியன் தீவு. | 10 00 |
| திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர், ஓய்வு) | 5 00 |
| திரு. முருக விசாகநம்பி அவர்கள் | 5 00 |
| திரு. A. T. A. ஈஸ்வர அடிகளார் | 5 00 |
| தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் | 5 00 |
| குரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள் | 5 00 |
| கல்லை. தே. கண்ணன் அவர்கள் [ஆசிரியர் 'வள்ளுவர் வழி'] | 5 00 |
| பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர் | 5 00 |
| திரு. K. வேணுகோபால், சென்னை-14 | 25 00 |
| திரு. பழனி ஆறுமுகம் அவர்கள், சேக்கிழார் பதிப்பகம், கிள்ளான், மலேசியா. | 25 00 |
| திரு. மாமணி, ("முகம்" ஆசிரியர்) சென்னை-78. | 25 00 |
| திரு. த. ஆறுமுகம் அவர்கள், 51, வெங்கடராமய்யர் தெரு, சென்னை-79. | 5 00 |

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை-108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது. ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி எம்.ஏ., பி.லிட்.

191738

## கழகப் புதிய வெளியீடுகள்

### பாவேந்தர் பாட்டுக் கதைகள்

—டாக்டர் பூவண்ணன், எம்.ஏ., பிஎச்.டி. 15 00

டாக்டர் பூவண்ணன், சிறுவர் சிறுகதை இலக்கிய மாமணி அரை நூற்றாண்டு காலமாகச் சிறுவர்க்காகப் பணியாற்றுகிறார். பாவேந்தர் பாரதிதாசன் பாக்கள் ஒவ்வொன்றிலும் மனம் தோய்ந்தவர். இளைஞர் இலக்கியம் என்ற அவர் கவிதைத் தொகுப்பில் கொண்ட ஈடுபாட்டின் விளைவாகச் சுவைத் தேன் துளிகளாகப் பிலிற்றும் வண்ணம் சில சிறுகதைகளை அவர்களுக்கேற்ற மொழியில் எழுதியுள்ளார். சிறுவர்கள் பயன்பெறப் படித்துச் சுவைப்பார்கள் என்பது திண்ணம்.

### பாட்டுத் தோட்டம்

—டாக்டர் பூவண்ணன், எம்.ஏ., பிஎச்.டி. 20 00

குழந்தைக் கவிஞர் வள்ளியப்பாவை அறியாதவர்களில்லை. அவர்க்குப் பின்னர் பூவண்ணன் ஆற்றும் தொண்டு அவரது எளிய, இனிய கவிதைகள் படித்து, மனத்தில் பதித்துச் சுவைத்து, மொழியின் வளத்தை உணர்ந்து மொழிப்பற்றை இளவயதிலேயே உணரும்படி செய்வதில் வல்லவர் என அவரது பாட்டுக்கள் பயன்படுகின்றன. அவற்றைப் படித்துச் சிறுவர் முதல் பெரியோர்வரை பயனடைவார்கள் என்பது திண்ணம்.

### சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம்

—டாக்டர் எஸ். பி. சபாரத்தினம், எம்.ஏ., பிஎச்.டி. 15 00

வேதங்களைப்போல, ஆகமங்கள் சிவத்தின் பரத்துவத்தை அறிந்துகொள்ள உதவும் நூல்கள். சிவ ஆகமங்களின் ஒவ்வொரு பகுதியையும் தக்க சான்றுகளுடன் இந்நூல் வெளியிடுகின்றது. தமிழிலுள்ள சித்தாந்த சாத்திரங்களைப் போலவே, சிவ ஆகமங்களையும் நன்கு படித்து உணரவேண்டும். அதற்கு மொழி ஒரு தடையாக இருக்காதபடி தமிழில் சிறந்த முறையில் கருத்துக்களைச் செம்மையுறத் தந்துள்ள ஆசிரியர் பாராட்டுக்குரியவர். ஆகமங்களில் பற்றுடையவர்கள் அனைவரும் விருப்பு வெறுப்பின்றிப் படித்துப் பயனடைய வேண்டும் என்பது எங்கள் வேண்டுகோள்.

பதிவு எண்: M/4899 DEC. 1992


# Asian Educational Services

(C-2-15, SDA. New Delhi-110016.)

Branch: No. 5, Sripuram First Street,
Royapettah, Madras-600 014.

Phone No. 865040

| | | | |
|---|---|---|---|
| A Comprehensive Tamil and English Dictionary —WINSLOW M. | | 165 | 00 |
| English Tamil Dictionary —WINSLOW | | 165 | 00 |
| Abithana Chinthamani-Encyclopaedia of Tamil Literature —SINGARAVELU MUDALIAR | | 165 | 00 |
| Thirukkural Original Tamil with English Translation —DREW & LAZARUS | GB | 60 | 00 |
| | HB | 35 | 00 |
| | PB | 20 | 00 |
| Tamil Moli Akarathi (Tamil-Tamil Dictionary) Coming Shortly —KATHIRAIVER PILLAI | | 165 | 00 |
| A Grammar of the Common Dialect of the Tamil language —JOSEPH BESCHI | | 145 | 00 |
| Dictionary of Tamil Proverbs —LAZARUS JOHN | | 195 | 00 |

Books can be had of:

**The South India Saiva Siddhantha Works, Publishing Society, Tinnevelly, Ltd.,**

154, T. T. K. Road, Madras-18.

Branches:

79, Prakasam Saalai (Broadway), Madras-108.
Tirunelvelli-6. Madurai-1. Coimbatore-1.
Kumbakonam-1. Trichirappalli-2. Salem-1.


அப்பர் அச்சகம், சென்னை-108.